உ
கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௪௩.] விய-௵ ஆவணி—புரட்டாசி-௴ [பகுதி. ௧௦-௧௧.
Vol. 43. August—October 1946. No. 10-11.

ஒருதுறைக்கோவையாராய்ச்சி

[௧௬௭-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

இக்கோவையுள் 'நரியாடு மான்முயல்' * என்று தொடங்கும் செய்யுளில் நுவல்பொருள் (நாணிக்கண்புதைத்தல்) கூறும் பகுதி சங்கத்துள்ள ஓலைச்சுவடிகளிலும், மூலப்பதிப்புக்களிலும் ஒரேபடியாக,

"அரியாடு கூத்துமுன் காட்டிய நீயினி யம்புலிச்சோ
தரியாடு கூத்தையுங் காட்டிலுண் டாம்வெகு தன்மங்களே"

என்று கர்ணப்படுகிறது.

இக்கோவையுரைப்பதிப்புள், உரையாசிரியர் மேற்காட்டிய அடிகளுள், 'அம்புலிச்சோதரி' என்றிருப்பதனை, 'அம்புலிக்கோதரி' என்றுகொண்டு,

"அரியாடு கூத்துமுன் காட்டிய நீயினி யம்புலிக்கோ
தரியாடு கூத்தையுங் காட்டிலுண் டாம்வெகு தன்மங்களே"

என்று பதித்து, அவ்வடிகளுக்கு,

---

* இது, பழைய மூலப்பதிப்புக்களிரண்டிலும் ஓரோலைச்சுவடியிலும் 226-ஆம் செய்யுளாகவும், பிறிதோர் ஓலைச்சுவடியில் 230-ஆம் செய்யுளாகவும் உரைப்பதிப்புள் 219-ஆம் செய்யுளாகவும் காணப்படுகிறது.

> "திருமாலாடின கூத்தை முன்னே காட்டின நீ, இனி மேல் சந்திரனாகிய கண்ணைத்தரித்த சிவபெருமான் ஆடின கூத்தையும் காட்டினால் வெகுசுகிர்தங்கள் உனக்கு உண்டாகும்"

என்று வெளிப்படைப் பொருளும்,

> "'அம்புலிக்கோதரி' என்பதற்குச் 'சந்திரனை அழகாகச் சிரசில் தரித்தவன் என்றுரைப்பினும் அமையும்"

என்று இடையே ஒருதொடருக்கு அர்த்தாந்தரமும்,

> "அரியாடுகூத்து—குடக்கூத்து. அம்புலிக்கோதரியாடுகூத்து—கோடுகோட்டி. இவை முறையே தனத்தையும் கண்ணையும் குறித்துநின்றன. 'கோடுகோட்டி' என்பதற்குப் பொருள் 'மிகவும் வளைவுடையது' என்பது, (கண்)"

என்று குறிப்புப்பொருளும் காட்டியுள்ளார்.

இங்கே 'அம்புலிக்கோதரி' என்ற தொடர்க்குச் 'சந்திரனாகிய கண்ணைத் தரித்த' என்று பொருள்கொள்வதல்லது, வெளிப்படைப் பொருளில் உரையாசிரியர் காட்டியபடி, 'சந்திரனாகிய கண்ணைத் தரித்தவன்' என்று பொருள்கொள்ளல் அமையாது. 'ஸ்ரீ' என்பது திருமகளையுணர்த்துமாயினும், 'திருமகளை (மார்பில்) தரித்தவன்' என்ற பொருளிற் 'ஸ்ரீதரி' என்று வழங்குதல் இல்லை. அதுபோல, 'அம்புலிக்கோ' என்பது 'சந்திரனாகிய கண்' என்று பொருள்படுமாயினும், 'சந்திரனாகிய கண்ணைத்தரித்தவன்' என்ற பொருளில் 'அம்புலிக்கோதரி' என்று வழங்குதல் அமையாது. 'தரித்தவன்' என்னும் பொருளில் 'தரி' என வழங்குதல் அமையாமையானும், 'கோ' எனும் சொற்கு, அழகு தலை என்னும் பொருளில் பிரசித்தமான வழக்கின்மையானும், 'சந்திரனை அழகாகச் சிரசில் தரித்தவன்' என்னும் அர்த்தாந்தரமும் அமைவுடையதாகாது.

இவை ஒருவாறு அமைவுடைய என்று கொண்டாலும், குறிப்புப்பொருளிலே, குடம் உவமையாகுபெயராய்த் தனத்தைக் குறித்தலல்லது, உரையாசிரியர் காட்டியபடி 'குடக்கூத்து' தனத்தைக்குறித்துநிற்றலும், கோடுகோட்டி கண்ணைக்குறித்துநிற்றலும் எவ்வாற்றானும் அமையாது.

இவ்வாறு வெளிப்படையும் குறிப்புமாக உரைகாரர்காட்டிய பொருள் பொருந்தாமையால், முற்குறித்த பழைய பிரதிகளிலுள்ள 'அம்புலிச்சோதரி' என்ற பாடங்கொண்டுநோக்குமிடத்து, 'அம்புலிச்சோதரியாடுகூத்து' என்பது, 'சந்திரனோடு ஒருவயிஞனுதித்தவளாகிய திருமகளாடிய ஆடல்' என்று பொருள்படும். அம்புலி - சந்திரன். சோதரி - உடன்பிறந்தா(ளாகிய திருமக)ள். திருமகள் ஆடிய ஆடல் பாவை யென்பது. அரியாடுகூத்து - திருமாலாடிய கூத்து; அது குடம் எனப்படும். குடங்கொண்டாடியகூத்து குடக்கூத்து. பாவையுருக்கொண்டாடியகூத்து பாவைக்கூத்து. குடம் பாவை என்பவை வெளிப்படைப்பொருளில் அவ்வப்பெயருள்ள கூத்துக்களை யுணர்த்தின. குறிப்புப்பொருளில் ஆகுபெயராய் முறையே தனத்தையும் கண்ணையும் உணர்த்தின. இங்கே கண்ணிற்கருமணியகத்துத்தோன்றும் உருவினையுணர்த்தும் பாவை யென்பது கண்ணையுணர்த்தினமையால் ஆகுபெயராயிற்று.

ஆகவே, 'அம்புலிச்சோதரி' என்பது,

"திருமாலாடலை முன்னேகாட்டிய நீ இனித் திருமகளாடலையும்
(எனக்குக்)காட்டினுல் (உனக்கு) மிக்க புண்ணியம் உண்டு"

என்று வெளிப்படைப்பொருளும்,

"தனத்தைக் காட்டியநீ கண்ணையும் (எனக்குக்) காட்டினுல்
(உனக்கு) மிக்க புண்ணியம் உண்டு"

என்று குறிப்புப்பொருளும் இனிதியையநிற்றலால் அதுவே ஆசிரியர் கருத்தொடுபட்டபாடமென்பதும், 'அம்புலிக்கோதரி' என்பது ககர சகர பேதங்கண்டு பொருளுணருமாற்றலற்ற ஏட்டெழுத்தாளரால் திரிந்த பிழைப்பாடமென்பதும் புலனாகும்.

[தொடரும்]

T. K. இராமாநுஜையங்கார்,

உதவிப்பத்திராசிரியர்,

உ

பரிசோதனைத்தொடர்—2

நாலடியாரின்கண்ணே பொறையுடைமை என்னும் அதிகாரத்திற் கீழ்க்காட்டப்பெறும் செய்யுளுக்குச் சடகோபராமாநுஜாசாரியர் எழுதிய உரையை மறுத்து நண்பர் பண்டித ஸ்ரீ ஆ. சிவசுப்பிரமணிய ஐயரவர்கள் ஒருரை "பரிசோதனைத்தொடர்" என்னும் பொதுமொழிக்கீழ்ச் செந்தமிழ்த்தொகுதி 43 பகுதி 9-ல் வெளியிட்டுள்ளார்கள். அதனைக் கண்ட என் மாணவர்களில் ஒருவர் யான் தங்களுக்குக் கூறிய உரை வேறாக இருத்தலின் இவற்றுள் மெய்யுரை எது? என்று என்னை வினவினர். ஆதலால் இரண்டுரைகளின் இயல்பினையும் உலகம் அறிந்துகோடற்பொருட்டு ஈண்டுத் தருகின்றேன். அச்செய்யுள் வருமாறு:—

இன்பம் பயந்தாங் கிழிவு தலைவரினும்
இன்பத்தின் பக்கம் இருந்தைக்க—இன்பம்
ஒழியாமை கண்டாலும் ஓங்கருவி நாட!
பழியாகா வாறே தலை.

இச்செய்யுளுக்கு ஐயரவர்கள் எழுதியவுரையை இடம் வீணாகாவாறு பொழிப்பாக ஈண்டுத் தருகின்றேன். அது,

"(ஒரு வினையால்) இன்பம் பயக்கப்பட்டு (உயர்வுவரினும்) அதுபோலவே (துன்பம் பயக்கப்பட்டு) இழிவுவரினும் (பயனும் பதவியும் நோக்காது) இன்பத்தின் சார்பாகிய அறத்தின்கண்ணே இருப்பாயாக; இன்பம் ஒழியாமை கண்டாலும் (பழியாகுமாற்றானே வந்ததெனின் விடுக்க; ஏனெனின்) பழியாகாவாற்றான் வந்த இன்பமே தலை ஆதலால்"

என்பது.

குறிப்புரை:—பக்கம்=சார்பு; இன்பத்தின்பக்கம்=இன்பத்தின்சார்பு, - அறம். இருந்தைக்க=இருக்க (வியங்கோள்முற்று). இன்னபிறவுமாம்.

இனி என் உரை வருமாறு:—

'இன்பம் பயந்தாங்கு இழிவு தலைவரினும்' என்றது இன்பத்தைத்தந்து இறுதியில் நரை, திரை, மூப்பு, சாக்காடு முதலாய இழிவுகள் வாய்ப்பெறினும் என்றவாறு. 'இன்பத்தின்பக்கம்' என்றது பின்னர் இழிவு தரத்தக்க இவ்வின்பத்தின்பக்கமாகிய மனையறத்தின்கண் என்றவாறு. 'இன்பம் ஒழியாமை கண்டாலும்' என்பது துறவறத்தான்வரும் இன்பம் ஒழியா இயல்பிற்றென்று கண்டாலும் என்றவாறு. 'பழியாகாவாறேதலை' என்பதன் பொருள் "அஃதும் பிறன்பழிப்பது இல்லாயின் நன்று" என்ற தமிழ்மறையினுற் பெறப்படுதல் காண்க.

எனவே, 'துறவறத்தான் வரும் இன்பம் ஒழியாஇயல்பிற்று எனக்கருதி மேற்கொள்ளின் அஃது ஆற்றல்சான்ரோர்க்குப் பழியாகாது புகழாகுமேயன்றி ஏனையோர்க்குத் துன்பமும் பழியும் பயப்பதாகும். ஆதலால் நிலையாமை முதலாய இழிவினை நினைந்து இல்லற இன்பத்தை வெறுத்து அதன்கண்ணே ஆற்றல்வருங்காறும் பொறுமையுடன் இருக்க' என்பதுவே இப்பாட்டிற் போந்த பொருளாகும்.

துறவறம் பூணுதார்க்கு வீடுபேறின்றென்பது அருகசமயத் துணிவாதலால் இன்பம் ஒழியாக் குணம்நோக்கித் துறவறத்தை ஆற்றல்சாலாதார் விரைந்து மேற்கொள்ளலாகாது என்று இச் செய்யுள் அறிவுறுத்துகின்றது.

திருக்குறட்கண் இல்லறவியலும், நாலடியார்க்கண் துறவறவியலும் முதன்மைபெற்றவாறும் ஈண்டு ஆராயற்பாலது.

'ஒழியா இன்பம் தருவதுநோக்கித் துறவறத்தைமேற்கொள்ள விரையாது, ஆற்றல் எய்துங்காறும் பொறுமையோடு அமைந்திருக்க' என அதிகாரத்தோடு பொருத்தி விரித்துரைத்துக் கொள்க.

பொழிப்புரை :— வளம் ஓங்கவைக்கும் அருவியையுடைய நாடனே! (முதற்கண்) இன்பத்தைத்தந்து (பின்னர் நிலையாமை

முதலாகிய) இழிவுகள் (அதனால்) வாப்பெறினும் (அவ்) இன்பத்தின்பகுதியாகிய இல்லறத்தின்கண் (பொறுமையோடு) அமைந்திருக்க; (துறவறத்தால்) வரும் இன்பம் நீங்காதிருத்தலைக் காண்கினும் (மற்றதன்பெருமைகண்டு) ஆற்றல்சாலாதார்மேற்கொள்ளின் பழியும் பாவமும் துன்பமும் எய்தும், ஆதலான் அது பழியொடு பட்டதாகாவாறே தலையாய அறம் எனப்படும் ஆதலால்.

குறிப்பு:—பக்கம், தலை என்பன ஆகுபெயர்.

இங்ஙனம்,

மாவை, தெல்லிப்பளை, இலங்கை.

க. சு. நவநீதகிருஷ்ணபாரதி.

இராமன் குருகுலவாஸம்

ஸ்ரீ. N. R. கிருஷ்ணஸ்வாமிஜயங்காரவர்கள் B.A., B.L., மதுரை.

"ஆய்ந்தேற வுணரைய அயற்கேயும் அறிவரிய
காய்ந்தேவில் உலகனைத்தும் கடலோடும் மலையோடும்
தீய்ந்தேறச் சுடுகிற்கும் படைக்கலங்கள் செய்தவத்தால்
ஈய்ந்தேனும் மனமுட்க இவற்கேவல் செய்தனவால்"

இராமன் குருகுலவாசஞ்செய்ததன்பயன் விசுவாமித்திரன் வாக்கால் சதாநந்தரிடம் சொல்லப்பெறுகிறது. முந்திய கதையைக்கேட்பதிற் சிறிது கவனக்குறைவாயிருந்திருப்பினும், இதை ஆராய்ந்துணரக்கடவீர்! என்ற பீடிகையோடு தொடங்குகிறான். இராமனுக்குத் தானளித்த படைக்கலங்களைப் பெறுவதற்கு விசுவாமித்திரன் பெருந்தவம் செய்தது பிரசித்தம். அதுகிடக்க; அவைகளை இராமனிடம் தருவதற்குத் தான் இன்னும் பெருந்தவஞ்செய்திருந்தேன் என்கிறான். இவன் அந்தந்த அஸ்த்ரங்களின் அதிதேவதைகளைப் போற்றிப் பொருள்கொண்டும் பாடிப் பறைகொண்டும் அவைகளுக்கு அடிமைசெய்துவந்தான். இவன் மனமும் உட்கும் (நடுங்கும்) படி அவை இராமபிரானுக்கு ஏவல் செய்வதைக்கண்டவுடன் இவனது ஆச்சர்யம் அளவுக்கடங்கவில்லை. அந்த ஒரு அதிசயத்தினால் இவன் யாரென்று உணர்ந்துகொள் என்கிறான்.

மதிப்புரை

(1) திருக்குறள் அந்தாதி, (2) குழந்தையுள்ளம், (3) வள்ளுவர் வகுத்த நம் நாட்டுச்சட்டங்கள் என்னும் இவை சைனிகமித்திரன் பத்திராதிபர் இராசீபுரம் R. K. அரங்கசாமிஅவர்களால் தொகுக்கப்பட்டவை. இவற்றுள் முன்னது திருக்குறள்களிற் பலவற்றை மக்கள் மனப்பாடமாக்கிக் கொள்வதற்குதவியாக அந்தாதித்தொடையான் அமைத்துக்காட்டுவது. இதன் விலை அணு 10. பின்னது மக்கள் ஒழுகலாற்றுமுறையைத் திருக்குறளிலிருந்து காட்டமுயல்வது. இதன் விலை அணு 4. நடுவணது சிறுவருள்ளத்திலே திருக்குறள்களிற் கண்டபொருள்களிற் சிலவற்றைப் பதிக்கமுயல்வது. இதன் விலை அணு 2. இவற்றால் திருவள்ளுவர்சீர்மையினையும் திருக்குறளின்பெருமையினையும் உலகிற் பரப்பமுயலும் திரு. R. K. அரங்கசாமியவர்கள் நோக்கம் பாராட்டத்தகும்.

கம்பராமாயணம் பாலகாண்டம் திருவவதாரப்படலம் முடிய (குறிப்புரையுடன்):—செந்தமிழ்த்தெய்வத்தின் சீரிய அணிகலமாகி ஒப்பும் உயர்வும் அற்று விளங்கும் ஒரு சில பாரகாவியங்களுள், கம்பர் இயற்றிய இராமாவதாரநூலும் ஒன்றென்பது வெளிப்படை. சுருக்கச்சொல்லல் முதலிய எல்லா அழகும் அமைந்த செய்யுணடையாலும் சந்த அமைதியாலும் நாடக முறைக்கியையக் கதைப்பகுதிகளை வகுத்துக்கொண்டு கதாபாத்திரங்களின் கூற்றுக்களை நயமிகவுரைத்துச்செல்லும் முறையாலும் சிறந்த முத்தமிழிலக்கியமாக நிலவும் இந்நூல், கற்றோரேயன்றி மற்றோராலும் பெரிதும் பாராட்டிப் பயிலப்பட்டதென்பது, அதன் செய்யுளுருவம் பலவேறு பிரதிபேதங்களால் மிகமிக மாறியிருப்பதனால் நன்குவிளங்கும். இவ்வாறு பிரதிபேதங்கள் மலிந்த வேறு நூலினைக் காண்டல் அரிது. இந்நூல் இதுவரை பலரால் பலமுறை அச்சிடப்பெற்றிருப்பினும், இன்னும் ஆங்காங்கு அநேக செய்யுள்களில் உண்மைப்பாடம் ஆராய்ந்து கண்டு தெளியத்தக்கனவாயுள்ளது. பழந்தமிழ்நூல்களை நன்கு ஆய்ந்து பலவகை விளக்கக்குறிப்புக்களுடன் அச்சிட்டுதவிய மஹாமஹோபாத்யாயஐயரவர்களால் இந்நூல் அச்சிடப்பெற்றிருப்பின் எல்லாவகையிலும் சிறந்து விளங்கியிருக்கும். அது வாய்க்கவில்லை. எனினும், இப்போது அவர்கள் குமாரர் திரு. S. கலியாணசுந்தரையரவர்களால் பாலகாண்டத்தில் திருவவதாரப்படலமுடியவுள்ள பகுதி ஐயரவர்கள் நூல்நிலையத்தின் ஐந்தாவதுவெளியீடாக அச்சிடப்பட்டுளது. இதனுள், ஐயரவர்கள் தொகுத்துவைத்த ஆராய்ச்சிக்குறிப்புக்களும், குறிப்புரையும், ஓலைச்சுவடிகளோடு ஒப்புநோக்கித் திருத்திய பிரதிபேதங்களும் பதிப்பாசிரியரால் சேர்க்கப்பட்டுள்ளனவென்று தெரிதலால் இப்பதிப்பு, இராமாவதாரநூற்பதிப்பாளர்க்கும் உரைப்பதிப்பாளர்க்கும் சொற்பொழிவாளர்க்கும் ஆராய்ச்சியாளர்க்கும் பிறர்க்கும் ஓரளவு பயன்படக்கூடும். இதன்விலை ரூபா இரண்டு. வேண்டுவோர் சென்னை அடையாற்றுக் கலாக்ஷேத்திரத்திற் பெறலாம்.

[மூவருலா:— இயற்றியவர்: கவிச்சக்ரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர். பதிப்பாசிரியர்: திரு. S. கலியாணசுந்தரையரவர்கள். விலைருபா நான்கு. கிடைக்குமிடம்: சென்னை அடையாற்றுக் கலாக்ஷேத்ரம்.]

மூவருலா என்பது மூவர்விஷயமாக இயற்றப்பட்ட உலா என்று பொருள்படும். இங்கே மூவராவார் கி. பி. பன்னிரண்டாநூற்றாண்டில் முறையே தந்தையும் மைந்தனும் பேரனுமாக மிக்கசிறப்புடன் விளங்கிய விக்கிரமன், குலோத்துங்கன், இராஜராஜன் என்னும் மூன்றுதலைமுறையரசராவர்; உலா என்பது தேவரும் அரசரும் பரிவாரங்கள் சூழத் தம் நகரில் உலாவருதலை விரித்துப்பேசும் ஒருவகைப்பிரபந்தமாகும். எனவே மூவருலா என்பது மேற்குறித்த சோழமன்னர் மூவரையும் பாட்டுடைத்தலைவராகக் கொண்டு அம்மூவர்காலத்தும் அவர்களுடைய அரசவைப்பெரும்புலவராக நிலவிய கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரால் அவ்வரசர்பெருமையெல்லாம் நன்குபுலனாகும்படி தனித்தனி இயற்றப்பட்ட விக்கிரமசோழனுலா, குலோத்துங்கசோழனுலா, இராஜராஜசோழனுலா என்ற மூன்று பிரபந்தங்களையும் குறிக்கும். இவ்வுலாக்களிலே சோழர்குலமுறையும் அவர்தம் வீரமும் கொடையும் வென்றியும் நாட்டியலும் அந்நாட்டு மக்களியல்பும் அம்மூவர் செங்கோன்மையும் ஆற்றலும் அவர்க்கு அமைச்சுப்பூண்டோர்திறமும், அவர்காலத்துப் பிற அரசர் தகைமையும் ஆதியவை இனிது பேசப்படுகின்றன. புலவர்பெருமக்களால் நன்குமதிக்கப்படும் இவ்வுலாக்களுள் விக்கிரமசோழனுலா மூலம்மட்டும் பல ஆண்டுகளுக்குமுன் முதன்முதல் இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப்பிரசுரமாக வெளியிடப்பட்டது. அதன்பின் மேற்குறித்த மூன்றுலாக்களின் மூலங்களும் 1926-ஆம் ஆண்டு திரு. பண்டித. அ. கோபாலையரவர்களால் அவர்களுக்குக்கிடைத்த பிரதிகளில் உள்ளவாறு ஒரு புத்தகமாகப் பதிக்கப்பட்டன. இப்போது இம் மூன்றுலாக்களும், மஹாமஹோபாத்யாய சாமிநாதையரவர்கள்குமாரர் திரு. S. கலியாணசுந்தரையரவர்களால், இவ்வுலாக்களைப்பற்றியும் இவ்வுலாக்களைக்கொண்ட அரசர்களைப்பற்றியும் இவ்வுலாக்களையியற்றிய கூத்தரைப் பற்றியும் அறிந்துகொள்ளவேண்டியவற்றை விளக்கும் பலகட்டுரைகளுடனும் குறிப்புக்களுடனும் ஒரு புத்தகவடிவில் மஹாமஹோபாத்தியாயஐயரவர்கள் நூல்நிலையத்தின் ஆறவது வெளியீடாக அச்சிடப்பட்டுள்ளன. இப்புத்தகத்துள் குலோத்துங்கசோழனுலாவுக்குப் பழையவுரையும் புதியகுறிப்புரையும் மற்றவுலாக்களுக்குப் புதிய குறிப்புரையும் சேர்க்கப்பட்டுள்ளன. புதிய குறிப்புரையுள் மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள் ஆராய்ந்து எழுதித்தொகுத்துவைத்த குறிப்புக்களும் பிரதிபேதங்களும் சேர்க்கப்பட்டிருத்தலால் இப்புத்தகம் பயில்வார்க்கு மிகவும் பயன்படும். இப்புத்தகத்துள் விக்கிரசோழனுலாவில் 112-ஆம்கண்ணியின் முதலடி 'கொங்கை பசப்பார் கோல்வளை காப்பார்போல்' என்று தளைசிதைந்துகாணப்படுவதும் பிறவும் திருத்திப் படித்துக்கொள்ளத்தக்கன.

உ

திருக்குற்றாலத்தலபுராண இன்கவிவிளக்கம்

ஸ்ரீ. ராவ்சாஹிப். வே. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள், G.B.V.C.,

சஅ-ஆம்பக்கத் தொடர்ச்சி.

மூன்றாவது திருநகரச்சருக்கம்

22 விரும்பு கைக்குல மேகத் துளியெலாங்
கரும்பு கைக்குங் கனிமொழி மாதரார்
சுரும்பு கைக்கு மலர்க்குழல் தூட்டகில்
வரும்பு கைக்குளிர் வாசனை வீசுமால்.

விரும்புகைக் குல மேகம்—(எல்லாரும்) விரும்புதல் (செய்கின்ற) கூட்டம் (ஆன) மேகம். கரும்பு கைக்கும்—(மாதர்மொழியின் இனிமையோடு ஒப்பிட்டால்) கரும்பு (ருசி) கசப்பாகும்படியான. சுரும்பு - வண்டு. உகைக்கும் - எழுப்பும். புகைக் குளிர் வாசனை - புகையின் குளிர்ந்த மணம்.

குற்றாலநகரத்தில் குளித்தமாதர் கூந்தலின் ஈரம் புலர்தற்கு ஊட்டும் அகிற்புகை எழும்பி மேலேசென்று மேகத்துடன் அளாவுதலால், அந்த மேகத்தினின்று விழும் மழைத்துளிகள் அகிற்புகைமணம் வீசும் என்பது கருத்து. (22)

23 பயிலுமே னிலைக டோறும் பந்தடித் தாடு வாரை
மயிலெனக் குயில்பின் காட்ட மழலைவா யிசையா லஞ்சிக்
குயிலென மயில்பின் காட்டக் குழைகளா லளகக் கோத்தால்
வெயிலொடு புயலுங் காட்டி மீட்டுமீட் டழையா நிற்பார்.

பயிலல் - பழகுதல். மேனிலை - மேன்மாடம். குழை—(காதில் அணியும்) குண்டலம். அளகம் - கூந்தல். புயல் - மேகம்.

மேன்மாடத்திற் பந்தடித்து விளையாடுகின்ற மாதரை ஆடுகின்ற மயில்களென நினைத்துக் குயில்கள் பின்காட்டியோட, அவர்கள் பாட்டிசையைக்கேட்டு அவர்களைக் குயில்களென நினைத்து மயில்கள் பின்காட்டியோட, அவர்கள் காதிலணிந்த குண்டலங்களின் (வெயில்போன்ற) ஒளியால் (வெயிலைவிரும்பும் இயல்புடைய) குயில்களைத் திரும்பிவரும்படியும் (மேகம்போன்ற) கூந்தலால்

(மேகத்தைவிரும்பும்) மயில்களைத் திரும்பிவரும்படியும் செய்வார்கள் என்பது கருத்து.

மேகத்தைவிரும்பும் மயில்களும் வெயிலைவிரும்பும் குயில்களும் ஒன்றுக்கொன்று பகையானபொருள்கள் என்பது கவிமரபு. (23)

24 பச்சையாற் பவளக் கோத்தாற் பதுமராகத்தான் முத்தால்
வச்சிர வயிடூயத்தான் மற்றுள மணிக ளாலும்
அச்சினில் வார்த்தா லன்ன வணிகிளர் மாட வீதி
நச்சர வுச்சி யாட்கு நவமணி மாலை மானும்.

பச்சை - மரகதம். பதுமராகம் - செம்மணி - மாணிக்கம் - சிவப்பு (ரத்தினம்). வச்சிரம் - வயிரம். வயிடூயம் - வைடூரியம். நச்சரவு உச்சியாள் - நஞ்சையுடைய பாம்பு (ஆகிய ஆதிசேடன்) உச்சந்தலைமீது (வைத்துச் சுமந்துகொண்டு) இருக்கின்ற பூமிதேவி. நவமணிமாலை - ஒன்பது(வகை) இரத்தினங்களாலாகிய மாலை.

ஒன்பதுவகை யிரத்தினங்களைக்கொண்டு அச்சில்வார்த்தாற் போன்ற (பலவகைவருணம்பூசப்பெற்ற) மாளிகைவரிசைகளையுடைய வீதிகள், பூமிதேவி (விரும்பி) அணிந்த நவரத்தினமாலையை ஒக்கும் என்பது கருத்து. (24)

25 தாயின் மிக்கவன் றடோழ முச்சகங்
கோயில் புக்கு வருபெருங் கோள்கையாற்
சேயின் மிக்குல குண்டுமிழ் சீதரன்
வாயின் மிக்கது கோபுர வாயிலே.

தாயின்மிக்கவன் - தாயினும் (அன்பு) மிகுந்தவன் - இங்கே கோயிலிலுள்ள சிவன். தாள் தொழ - பாதங்களைப் பணிய. முச்சகம் - மூன்று லோகத்துள்ளார். புக்குவரு - (கோயில்வாசல்கள்வழியே உள்ளே) புகுந்து (சுவாமியைத் தெரிசித்தபின்பு வெளியே) வருகின்ற. சேய் - குழந்தை; இங்கே குழந்தையாய் ஆலிலையிற் கண்வளர்ந்த பாலப்பருவத்தைக் குறித்தது. சேயின்மிக்கு - சேய் (- பிள்ளை)த் தன்மையின் மேம்பட்டு. உமிழ்தல் - துப்புதல். சீதரன் - திருமால். வாயின்மிக்கது - வாயினும் பெரியது.

திரிலோகவாசிகளும் கோயிலின் கோபுரவாயில்கள்வழியே உள்ளேபோவதும் சுவாமிதெரிசனம்செய்து வெளியேவருவதுமாயிருத்தலால், அந்த வாயில் ஒவ்வொன்றும் மூன்றுலகங்களையும் உண்டு உமிழ்ந்த திருமால்வாயினும் பெரியது என்பது கருத்து. (25)

26 வாடைவந் துலவிய படிக மாமணி
மேடையி லுடுக்குழாத் துலவும் வெண்பிறை
ஓடைநீர்ப் பெருந்தட மதனி லோதிமப்
பேடைதன் பார்ப்பொடும் பெயர்தல் போலுமால்.

வாடை - குளிர்காற்று. படிகம் - பளிங்கு. உடு - நட்சத்திரம். குழாம் - கூட்டம். ஓதிமம் - அன்னம். பேடை - பெட்டை. ஓதிமப் பேடை - பெட்டையன்னம். பார்ப்பு - குஞ்சுகள். பெயர்தல் - போதல்.

பளிங்குமேடையில் தோன்றும் வானவீதியில் நட்சத்திரக் கூட்ட நடுவில் உலாவும் பிறைச்சந்திரன், தடாகத்திற் குஞ்சுகளோடு போகின்ற அன்னம்போலும் என்பது கருத்து. (26)

27 பளிக்குமா ளிகையின்மேற் பவளத் தூவிகள்
குளிக்குநீர்க் குளங்களின்மேற் குமுதம் பூத்ததாம்
துளிக்கரு முகிலினஞ் சூழ்ந் துலாவரல்
களிப்புறு சிறையளிக் கணங்க ளேய்க்குமால்.

குமுதம் - செவ்வல்லி. துளிக் கரு முகிலினம்- மழைத்துளிகளையுடைய கரிய மேகக்கூட்டம். உலாவரல் - உலாவுதல் - சஞ்சரித்தல். கணம் - கூட்டம். ஏய்க்கும் - போலும்.

பளிங்குமாடங்களின்மேல் விளங்கும் பவளத்தூபிகள், குளங்களிற்பூத்த செவ்வல்லிமலர்போலும்; அந்தத் தூபிகளைச் சூழ்ந்து உலாவும் மேகம், அந்தச் செவ்வல்லிமலரைச்சுற்றிப் பறக்கும் வண்டுக்கூட்டம்போலும் என்பது கருத்து. (27)

28 திங்களை முகமெனச் செய்து நான்முகன்
பங்கய முகிழினைப் பதித்ததாலன்றே
நங்கையர் குவிமுலை நாளும் வெப்பவன்
அங்கதிர் பரப்பினு மலர்ந்திடாததே.

திங்கள் - சந்திரன். பங்கய முகிழ் - தாமரையரும்புகள்.

பிரமதேவன் மாதர்களுக்குச் சந்திரனை முகமாகச்செய்து (அந்த முகத்தை அடுத்துள்ள மார்பில்) தாமரைமொட்டுக்களைத் தனங்களாகப் பதித்ததால் அல்லவா, அவர்களுடைய கொங்கைத் தாமரையரும்புகள் (அடுத்துள்ள முகசந்திரனது நிலவினால் மலரா வொண்ணாதவண்ணம் தடைசெய்யப்பட்டுத் தூரத்துள்ள) சூரியனதுவெயில் மேலே பரவியபோதும் மலராமல் (அரும்புகளாகவே) இருக்கின்றன என்பது கருத்து. (28)

29 மருவுறுநன் னெறிநிலத்து வாய்மையெனும் விதைதெளித்துப்
பெருகுதண நீர்பாய்த்துப் பிறங்குசினக் களைகடிந்து
தருமமெனும் பயிர்வளர்த்துச் சகலபோ கமும்விளைக்கும்
பொருவருசீர்த் திருநகரம் புடார்ச்சுனபுண் ணியபுரமே.

வாய்மை - உண்மை. பாய்த்து - பாயச்செய்து. 'பாய்வித்து' என்பது, செய்யுள்விகாரமாய்ப் 'பாய்த்து' என நின்றது. சினக் களை கடிந்து - கோபமாகிய களைகளைப் பிடுங்கியெறிந்து.

(நகரமாந்தர்கள்) நன்னெறிநிலத்தில் உண்மைவிதைவிதைத்து, நிரம்பிய நற்குணநீரைப் பாய்ச்சிக் கோபக்களைகளைப் பிடுங்கி யெறிந்து, தருமப்பயிர்வளர்த்து (தருமபலன்களாக)ச் சகல சுக போகங்களையும் உண்டாக்(கி அனுபவிக்)கும் ஒப்பற்றநகரம், குற்றாலநகரமே என்பது கருத்து. (29)

30 மாமணிமண் டபமாட மாளிகைக ளுறுப்பாகக்
கோமதிய முகமாகக் கொங்கைகோ புரமாகக்
காமருதே ரல்குலாக் கடிமதின்மே கலையாகப்
பூமகளா ரரசிருக்கும் பொன்னகா மிந்நகரம்.

மாமணி - பெரிய இரத்தினங்கள் (இழைத்த). உறுப்பு - அவயவம். கோ - ஆகாயம். மதியம் - சந்திரன். கோ மதியம் -(குற்றாலநகரத்துக்கு மேலேயுள்ள) ஆகாயத்தில் (விளங்கும்) சந்திரன். காமரு - (காமர் + உ. உ. சாரியை) - அழகு (உடைய). கடிமதில் - காவல் (ஆக உள்ள) மதில். பூமகளார் என்பதில், ஆர் மரியாதைப்பன்மை விகுதி. பொன் நகரம் - அழகிய நகரம்.

இந்தக் குற்றாலநகரம், சந்திரன்முகமாகவும் கோபுரம் கொங்கையாகவும் தேர் அல்குலாகவும் மதில் மேகலையாகவும் மாடம் மண்டபம் மாளிகை (முதலியவை)கள் மற்ற அவயவங்களாகவும் கொண்டு பூமிதேவி அரசிருக்கும் அழகியநகரமர்ம என்பது கருத்து. (30)

31 இல்லறமுந் துறவறமு மிடைவிடார் வேறுக்கைவிடார்
பல்பயிர்க்கும் யோகியர்க்கும் பதந்தோறுங்கோண் முப்பொழியும்
நல்லவரும் விளையாட்டு நயந்தவருஞ் சூதெறிவார்
அல்லவரு மெல்லவரு மாதரிப்பா ரிரவலரை.

இடைவிடார் - நடுவில் விடாதவர்கள். வெறுக்கை - (1) செல்வம்; (2) வெறுத்தல். பதம் - பருவம். கொண்மூப் பொழியும்—(1) கொண்மூ (- மேகம்) பொழியும் - மேகம் (மழை) பொழியும். (2) கொள் மூப்பு ஒழியும் - (வயதுமிகுந்தபோது) அடைகின்ற முதுமை (க்குரிய தளர்ச்சி) நீங்கும். நல்லவர் - நல்லொழுக்கம் உடையார். சூது - சூதாட்டம்; சூதாடு கருவி. சூது எறிவார் - (1) சூதாட்டத்தை (வெறுத்து) விலக்கிவிடுவார்கள். (2) சூதாடுகருவியை ஆடும்போது உருட்டுவார்கள். அல்லவர் - (அல்லோன் என்ற) சந்திரன். எல்லவரும் - எல்லாரும். ஆதரிப்பார் - பாதுகாப்பார். இரவலர் - (1) இரவு அலர் - (1) இரவில் மலரும் பூ. (2) இரப்போர் - யாசகர்.

இல்லறத்தார் செல்வத்தைக் கைவிடமாட்டார்கள். துறவறத்தார் (செல்வத்தையும் போகத்தையும்) வெறுத்தலை விடமாட்டார்கள். பயிர்க்குக் காலந்தோறும் மழைபெய்யும். யோகியர்க்கு வயசுமிகுந்தபோது அடைகின்ற கிழத்தன்மை ஒழியும். நல்லோர் சூதாட்டத்தை (வெறுத்து) விலக்கிவிடுவார். சூதுவிளையாடுதலை விரும்பியவர்கள் அந்த ஆட்டத்திற் சூதாடுகருவியை உருட்டுவார்கள். சந்திரன் இரவிற்பூக்கும் மலர்களைப் (பூக்கச்செய்து) பாதுகாப்பான். எல்லாரும் யாசகரை (அவர்க்குவேண்டியவற்றைக்கொடுத்து) ஆதரிப்பார்கள் என்பது கருத்து. (31)

32 பன்னகச் சயன னாட்டிற் பங்கய னுலகிற் றேவர்
மன்னகர் சுவர்க்கந் தன்னில் வளமிகு நகரை யாரும்
நன்னக ரெனவே யிந்த நகர்ப்பெய ரிடுவா ராலல்
இந்நகர்ப் பெருஞ்சீர் கூற லெம்மனோர்க் கெளிய தாமே.

பன்னகம் - பாம்பு. சயனம் - படுக்கை. பன்னகசயனன் நாடு - வைகுந்தம். பங்கயன் உலகு - பிரமதேவனுடைய சத்தியலோகம்.

வைகுந்தம் பிரமலோகம் தேவலோகம் முதலிய உலகங்களில் உள்ள நகரங்களை வருணிப்போர், (—காசிநன்னகரம், காஞ்சிநன்னகரம், மதுரைநன்னகரம் என்பதுபோல) அந்த நகரங்களின் இறுதியில் 'நன்னகரம்' என்பதைச் சேர்த்து உரைப்பர்; அப்படிப்பட்ட நன்னகரம் என்பதே தன்பெயராக உடையது இந்நகரமாதலால் இந்த நகரத்தின்பெருமையைக் கூறுவது எம்மைப்போல்வார்க்கு எளியதாமோ? என்பது கருத்து. (32)

[தொடரும்]

பண்டைமக்களின் பொது இருப்பிடம்

ஒரு பழஞ்சொல்லாராய்ச்சி முடிபு

[சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர்.]

உலகிலுள்ள பாஷைகளெல்லாம் மனிதன் ஆதியில் தனது சிற்சத்தியினால் உருவாக்கிக்கொண்ட சில அடிகளிலிருந்தே விரிந்தும் விகற்பித்தும் உண்டாயின: எனும் உண்மையைப் பல அறிஞர்கள் நிலைநாட்டியிருக்கின்றார்கள். இவ்வுண்மையை நாம் ஒப்புங்கால் மனுக்குலம் முழுதும் ஒருகாலம் ஒருங்கே ஓரிடத்தில் வசித்தும், பின்னரே பிரிந்துபோய் வெவ்வேறு சாதி குலங்களாய் மாறியும், விவித மொழிக்குலங்களை உண்டாக்கியும் நின்றமை தெற்றெனப் புலப்படும். ஆயின், ஒருசில அடிகளிலிருந்துதான் பாஷையெல்லாம் விகற்பித்தது: என காட்டுதற்குப் பிரமாண்டமான பல அகராதிநூல்கள் வேண்டும். அவற்றை ஒருவர் தம் சீவியகாலம் முழுதும் முயன்றாலும் ஆக்கித்தருவது கஷ்டசாத்தியம். ஆயினும், நாம் இவ்வமயத்திற் செய்யத்தக்கது ஒன்று இருக்கின்றது. மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாத சிற்சில பொருள்கள் உண்டு; அவற்றின் ஆதிப்பெயர்களைமட்டில் எடுத்து ஆராய்ந்து, அப்பெயர்கள் எவ்வெச் சாதி குலங்களுள், பழஞ்சொற்களாய்க் காணப்படுகின்றவோ அவ்வக்குலங்கள், முன்னொருநாள் ஓரிடத்திற் கூடிவாழ்ந்தன; அப்பெயர்களைத் தம்முள் வழங்கின; பின் அவற்றைத் தாம் தாம் காலகதியிற் பிரிந்து பிரிந்து குடியேறச்சென்ற பிரதேசங்களுக்குக் கொண்டுபோயின: என நாம் அச்சமின்றி அறுதியிடலாம். இந்த ஆராய்ச்சிக்கு, அவ்வப்பாஷைக்குச் சொந்தமானவைகளாய் அவற்றில் நன்கு வேரூன்றியவைகளாய்த் தொன்றுதொட்டு வழங்கப்பட்டவைகளாய்ப் பிறமொழிகளிலிருந்து இடைக்காலத்தில் இரவல்வாங்கியவைகளே எனும் ஐயப்பாட்டுக்கு இலக்காகாதவைகளாய் உள்ள பெயர்களையே நாம் எடுத்தாளுதல் மிக வேண்டப்படும்.

எல், ஊதை, ஓதம், இழுது.

எவர்க்கும் உடனே புலப்படுகின்ற பொருள்களுள்ளே முதன்முதல் ஒளிப்பிழம்பாகிய சூரியனையும் அதன் வெளிச்சத்தையும் எடுத்துச் சொல்லலாம். உண்மையான பழமையுள்ள எல்லா ஆசிய - ஐரோப்பிய பாஷைகளிலும் செங்கதிரோன்பெயர் ஒன்றேயாயிருக்கக் காண்கின்றோம். தமிழில் அதன் மிகப் பழைய நாமம் எல். இச்சொல் எழுதலில்நின்று வந்தது. நாள்தோறும் எழும்புவது எல்—சூரியன். சுமேரியத்தில் எல—மு என்பது

தமிழில் எழும்பு என்பதற்குச் சரியானது; ஆயின், சுமேரியரோடுகூடச் செமித்தியரும் எல் ஆகிய வானசோதிப்பிழம்பின்பெயரை ஏலவே ஞான சோதிப்பிழம்பாகிய கடவுளுக்குக் கொடுத்தோதிவிட்டனர். சுமேரியத்தில் எல் மதிக்கடவுளையும் சுட்டும். அது இலு என்ற உருவத்தில், கடவுளின் திருநாமம் ஆகும். எபிரேயத்தில் எல் கடவுளைக்குறிக்க, அதுதான், அராபியத்தில் இலா, அல்லா என நின்று, அந்தப் பரம்பொருளுக்கே பெயராயிற்று. பிற பாஷைகளில் எல் பழையபடி சூரியனையே காட்டும். கிரேக்கத்தில் ஏலி-யொஸ் அல்லது ஹேலி—யொஸ் (elios, helios), லத்தினில் ஸொல் (sol), பிரித்தானியத்தில் ஹெயொல் (heol), கொதிக்கத்தில் ஸௌ-இல் (sauil), இங்கிலீஷில் ஸன் (sun), ஸம்ஸ்கிருதத்தில் ஸ்வர், ஸுறஸ், ஸூர்யஸ் (svar, suras, suryas) ஆதிய பேதங்களாக விகற்பித்துநிற்கும். சில பேதங்களில் கிரேக்கத்தில் ஏலி—யொஸ் என்பதைப்போல ஒவ்வொரு கடைநிலை கூட்டுண்டுள்ளது. கடைநிலையை நீக்க எஞ்சுவது ஏல்(—எல்) என்பதே. லத்தின் ஸொல் என்பதிற்போலச் சில பேதங்களில் ஸகரமாகிய ஒரு முதனிலைமெய் கூட்டுண்டது. அதை நீக்க ஒல் என்பதே எஞ்சும். இதைத் தமிழில் எல் எனும் சொல் அடையும் பேதங்களோடு ஒப்புநோக்கின் ஒல்லும் எல்லும் ஒன்றே என வெளிப்படும். எல் தமிழில் ஒல் என வந்தே ஒலித்தல் (வெள்ளையாக்கல்), ஒளி ஆதிய சொற்கள் ஆகின்றது. அது மட்டோ, உல் என வந்து, உலர்த்தற்சொல்லுக்கும் அடியாகின்றது. அப்பால், எல்தானே ககர, சகர, தகர, பகர, மகர, வகர முதனிலைமெய்கள் பெற்றுக் கெழு, சொலி, தெளி, பொலி, மின்னு, விளக்கு ஆதிய தொகைப்பட்ட வியுற்பன்னங்களையும் பிறப்பிக்கின்றது.

தமிழில் எல் சூரியனின் பெயராவதோடு, ஒளிக்கும் பெயராம். எல்லவன் (ஒளிசெய்வோன், சூரியன்), எல்லார் (ஒளியில் வசிப்போர், தேவர்) என்பவைகளைக் காண்க. எல் என்னும் சொல்லே தமிழில் ஒளி என நின்றும், வகர முதனிலைமெய்பெற்று வெளிச்சம் என நின்றும், பிரகாசத்தைக் குறிக்கின்றது. இந்து—ஐரோப்பிய பாஷைகளிலும் இவ்வாறு வெளிச்சச் சொற்கள் பல எல்லில்நின்று வந்திருத்தலை ஆராய்ந்து மகிழலாம். கிரேக்கம், லெயுக்—கொஸ் (leukos), லத்தின், லுக்ஸ் (lux), ஸம்ஸ்க்ருதம் ரோச்—சதே (rocate), லிதுவானியம் லௌக்ஸ் (lauks), சர்மனியம் லிஹ்ற் (licht; ப்ளிற்ஸ் (blitz), இங்கிலிஷ் லைற் (light), ப்ளேச் (blaze) ஆதியன பலவுள. இவற்றிற் பெரும்பாலும் தலையுயிர் கெட்டு, (உதாரணமாய்), எலுக் என்றிருக்கவேண்டியது லுக் என வந்திட்டது. ப்ளிற்ஸ்; ப்ளேச் என்றவைகளோடு தமிழ் வெளிச்சச்சொல்லை ஒப்பிடுக. ஆகவே, சூரியனின் ஒளியை ஒரே பெயராற் குறிப்பிட்ட மனுக்குலமெல்லாம் ஒருநாள் ஒருங்கேயிருந்தன என முடித்தல் ஒவ்வாதா?

செஞ்சுடரையும் வெளிச்சத்தையும் காட்டும் சொற்களை ஆராய்ந்த நாம் ஆதிமக்கள் தண்சுடருக்கு இட்ட பெயரையும் ஆராயத்தகும். அப்பெயரும் எல் எனும் வெளிச்சச் சொல்லினின்றே பிறந்தது. எல் எனும்சொல் முதன் மெய்பெற்று வெளிச்–சம், விள–ர், விளங்கு என வந்ததுபோல, மகரமுதன் மெய்ப்பேற்றினல், மிளி–ர், மின்–னு எனவும் வரும். அப்பால், மின்னுவது-மினுங்குவது-மீன்-(தாரகை). மினுங்குவதினுல் மச்சமும் மீன் எனப்பட்டது. இந்த மீன்சொல்லே விண், வான் என வந்தமைபோலப் பழந்தமிழில் மான் எனவும் வந்து சந்திரனுக்குப் பெயராயிற்றுப்போலும். இது அம்புலி மான் என்ற தொடரில் நன்முக விளங்குகின்றது. அழகிய புள்ளியுள்ளமான் என்றது கருத்து. மான் களங்கம் என வருவதை, மானைப்போன்ற களங்கமுள்ள சந்திரன் என விரித்தல் பொருந்தாது. சந்திரனின் களங்கம் மான் போன்றதன்றே? முயற்களங்கம் என்பது முயல்போன்ற மறுஎனப் பொருள் படலால், மான்களங்கமும் மான்போன்றமறு எனச் சற்றும் பொருத்தமின்றி வைத்தனர்போலும். மானின்—சந்திரனின் மறு என்பதே பொருந்தும். சந்திரனுக்கு மான் என்ற பெயர் பிற பழம்பாஷைகளிலெல்லாம் மருவிக் காணப்படுகின்றது. ஒல்லாந்தமொழியில் அது மான் (maan) என்றே நிற்கும். சர்மனியம் மனொ; (mano), லிதுவானியம் மெனு (menu); கொதிக்கம் மென (mena); ஆங்கில சாக்சனியம் மொன (mona); இங்கிலிஷ் மூன் (moon) என வரும். ஸம்ஸ்கிருதத்திலே சந்த்ர-மஸ் என்றதில், மஸ் எனும் பகுதி லத்தின் மென்ஸிஸ் (mensis=சந்திரனைச்சார்ந்தது, மாதம்) என்ற சொல்லிற்போலத் திங்களையே குறிக்கும் எனலாம். கிரேக்கம் ஆதிய சில பாஷைகளில் சந்திரனின்பெயர் மான், மேன் என்ற சாங்கமாய் இராமல், ஸெலேனே (கிரேக்கம், selene); லூன (லத்தின் luna); லுஸின் (சர்மீனியம் lusin) எனக் காணப்படுகின்றது. இச்சொற்களும் எல் எனும் அடியிலிருந்து வேறொரு வழியாற் பிறந்தனவே என உய்த்துணர்க.

சில பாஷைகளில் சந்திரனின் பெயர் தாரகைக்கும், தாரகையின் பெயர் சந்திரனுக்குமாக மாறிநிற்கக் காண்கின்றோம்; இவ்வாறுன பொருட்டிரிபு சொற்களையாளர் நன்கு அறிந்ததொன்று. இது மேல் வரும் மாட்டுப் பெயர் ஆட்டுப்பெயர் ஆதியவற்றிலும் நிகழ்ந்திருக்கின்றது. திங்கள் எனும் சொல் (திகழ்=தெளி=எல்) தமிழில் சந்திரனை உணர்த்தும்; சுமேரியத்தில் திங்கிர் (dingir) எனும் உருவத்தோடு, முன் தாரகையைக் குறித்தது; பின், தெய்வத்துக்குக் குறிப்பாயிற்று. கொதிக்கத்தில் துக்கில் (tuggl) எனவும், ஆங்கில—சாக்சனியத்தில் துங்கெல், துங்கொல் (tungel, tungol) எனவும் மருவிய இது தாரகைக்குப் பெயர். நோர்ஸ் பாஷையிலே துங்கில் (tungl) சந்திரன்பெயர்.

[தொடரும்]

திருத்துருத்திச் சொன்னவாறறிவார் கோயிற்கல்வெட்டுக்களிற் கண்டசெய்திகள்

[திருவாளர். வை. சுந்தரேசவாண்டையாரவர்கள், திருவையாறு.]

திருக்கோயிலை எடுப்பித்தவர்.

இத்திருக்கோயிலைக் கற்றளியாக எடுப்பித்தவர் உத்தமசோழனது தாயாராகிய செம்பியன்மாதேவியாராவர். இச்செய்தி இக்கோயிற் கருப்ப இல்லின் கிழக்கிலும் வடக்கிலும் பொறிக்கப்பெற்றுள்ள ("ஸ்வஸ்திஸ்ரீ கோவிராஜகேஸரிபன்மற்கு யாண்டு எ-வது" என்று தொடங்கும்) கல்வெட்டால் அறியக்கிடக்கின்றது.

கோயில் எடுப்பிக்கப்பெற்ற காலம்.

ஈண்டுக் குறிக்கப்பெற்றுள்ள இராசகேசரிவன்மர் என்பவர் முதலாம் இராசராசமன்னராவர். இவர் கி. பி. 985 முதல் 1014 வரை சோழ மண்டலத்தை ஆண்டவர். இவர் அரியணையேறிய கி. பி. 985-உடன் எழைக் கூட்டக் கி. பி. 992-ஆகின்றது. இந்தக் கி. பி. 992-ஆம் ஆண்டே கோயில் கட்டி நிறைவெய்தியகாலமாகும். எனவே, கோயில் கட்டப்பெற்று இற்றைக்கு 954-ஆண்டுகள் ஆகின்றன.

கோயில் நிலைபெற்றுள்ள இடம்.

இத்திருக்கோயில் சிவநெறிக்குரவாகிய திருநாவுக்கரசுப்பெருந்தகையார்காலத்தில் (கி. பி. ஏழாம்நூற்றாண்டில்) காவிரியின் நடுவில் இருந்தது. இச்செய்தி "பொன்னியின் நடுவுதன்னுள் பூம்புனல் பொலிந்து தோன்றும் துன்னிய துருத்தியானை" என்னும் அவரது தேவாரப்பகுதியால் விளங்கும். அதுகருதியே இதற்குத் துருத்தி என்ற பெயர் ஏற்பட்டுள்ளது. துருத்தி எனினும் அரங்கமெனினும் ஒக்கும். துருத்தி என்பதற்கு ஆற்றிடைக்குறை என்பது பொருள்.

முதலாம் இராசராசசோழன்காலத்தில் (பத்தாம்நூற்றாண்டின் பிற்பகுதியில்) இக்கோயில் காவிரிக்குத் தென்கரையில் இருந்தது. இச்செய்தியைத் "திண்டிறல் வென்றித் தண்டாற்கொண்ட கோவிராஜகேஸரி பன்மற்கு யாண்டு ௰எ-வது தென்கரை உய்யக்கொண்டார்வளநாட்டுத்

திருவழுந்தூர்நாட்டுத் தேவதானம் வீங்குநீர்த்துருத்தி சொன்னவாறறிவார் ஆடுகின்ற பொற்பலகை விடங்கருக்கு" என்னும் கல்வெட்டுப்பகுதி அறிவிக்கின்றது.

இவற்றால், திருநாவுக்கரசர்காலத்தில் காவிரியின்நடுவில் இருந்த இத்திருக்கோயில், முதலாம் இராசராசன்காலத்திலோ அல்லது அவனுக்கு முன்போ காவிரியின் தென்பகுதி தூர்க்கப்பட்டமையால் காவிரியின் தென் கரையில் அமைந்ததாயிருத்தல்வேண்டும் என்று பெறப்படுகின்றது. செம்பியன்மாதேவியார் இக்கோயிலைக் கட்டியசெய்தி முதலாம் ராசராசனது ஏழாம் ஆண்டுக் கல்வெட்டாற் பெறப்படுகின்றமையால் நீர்ப்பெருக்குள்ள காலங்களில் மக்கள் தடையின்றிச் சென்று வழிபாடாற்றுதற்கு நலமாயிருத்தற்பொருட்டுச் செம்பியின்மாதேவியாரின்வேண்டுகோளின்படி முதலாம் இராசராசன் காலத்தே இடைக்குறையாகிய தென்பகுதி தூர்க்கப்பட்டிருக்க வேண்டுமென்றுகொள்வது மிகவும் பொருத்தமுடையதாகும். அவ்வாறு தூர்க்கப்பட்டபின்னரே இத்திருக்கோயில் காவிரித்தென்கரைக்கோயிலாக எண்ணப்பட்டுவருகின்றது. [இங்கு எடுத்துக்காட்டிய கல்வெட்டிலுள்ள தென்கரை என்பதைக் காவிரிக்குத் தென்கரையாகக் கொள்ளல்வேண்டும்.]

இறைவன் திருப்பெயர்.

இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவர்க்குச் சொன்னவாறறிவார், கற்றளியுடைய மகாதேவர், வீங்குநீர்த்துருத்தியுடையார் என்னும் பெயர்கள் வழங்கிவந்துள்ளன. இவற்றுள் கற்றளியுடைய மகாதேவர் என்ற பெயர் கங்கைகொண்டசோழனது நான்காம் ஆண்டுக் கல்வெட்டிலேதான் முதன்முதலாகக் காணப்படுகின்றது.

திருக்கோயிலின் பெயர்.

இக்கோயில், வீங்குநீர்த்துருத்தியுடையார்கோயில், சொன்னவாறறிவார்கோயில், செய்யபாதஞ்சேர் கழல்வலார் பொற்கோயில் என்னும் பெயர்களுடன் வழங்கப்பட்டுவந்தது.

இச்செய்தி "ஆக நிலம் எட்டுமாவில் மேனோக்கின மரமும் கீழ்நோக்கிய கிணறும் அகப்பட இறையிலிசெய்துகொடுத்து இறைப்பொருளுக்கும் விலைப்பொருளுக்கும் வீங்குநீர்த்துருத்தியுடையார்கோயில் சொன்னவாறறிவார்கோயில் செய்யபாதஞ்சேர் கழல்வலார் பொற்கோயில் பிச்சன்வழியாகக்கொண்ட காசு ௩0. இக்காசு முப்பதும் கொண்டு இந்நிலம் எட்டுமாவும் சந்திராதித்தவற் அநுபவிக்கக்கடவார்களாகவும்" என்னும் அர்த்தமண்டபத்தின் வடபுறத்தில் விக்கிரமசோழதேவரின் ஐந்தாம் ஆண்டிற் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டுப்பகுதியால் விளங்கும்.]

வழிபாடு.

இத்திருக்கோயிலிற் சிறுகாலை உச்சியம்போது, அந்திப்போது, அர்த்தயாமம் என்னும் நான்குகாலங்களில் வழிபாடுகள் நடைபெற்றுவந்தன.

திருவமுதுவகைகள்.

வழிபாடுநடக்குங்காலங்களிற் பயற்றுப்பொங்கல் (கும்மாய அமுது), பருப்பமுது, தயிரமுது ஆகிய இவைகள் பொறிக்கறியமுதுகளுடன் நிவேதிக்கப்பட்டுவந்தன.

வாத்தியவகைகளும் பிறவும்.

வழிபாடுநடக்கும் நேரங்களில் பறை ஒன்று, மத்தளம் நான்கு, சங்கு இரண்டு, காளம் இரண்டு, சேகண்டிகை ஒன்று; தாளம் ஒன்று, கைம்மணி இரண்டு இவைகள் ஒலிக்கப்பெற்றுவந்தன. நடனம் இருந்துவந்தது.

ஆண்டுவிழா.

இத்திருக்கோயிலில் வைகாசித்திங்களில் திருவிழா நடந்துவந்தது. [இச்செய்தி "இதில் உடையார் சொன்னவாறறிவார் வைகாசித்திருநாள் திருவெழிச்சிக்கு வண்ணானன்செ(ய் நிலம் காலும், கும்பிடவந்து பூசித்தார் அமுதுசெய்கைக்கு நிலம் முக்காலே அரைமா அரைக்காணியும் ஆக நிலம் சந்திராதித்தவரை இறையிலியாக நாங்களே அநுபவிக்கக்கடவோமாகவும்" என்னும் விக்கிரமசோழனது எட்டாம் ஆண்டிற் செதுக்கப்பெற்ற கல்வெட்டாற் பெறப்படுகின்றது.]

செம்பியன்மாதேவியார் அளித்த நிபந்தங்கள்.

இத்திருக்கோயிலை எடுப்பித்த செம்பியன்மாதேவியார் இறைவனுக்குத் திருவமுது சாத்துப்படி முதலியவற்றிற்கு அளித்த நிபந்தங்கள் மிகப் பல. அவற்றுள் ஒருசில,

"விதானம் ஒன்றிற்கு ஓராட்டைக்கு நெல்லு ஐங்கலமும், திருமேற்கட்டி ஒன்றுக்கு ஓராட்டைக்கு நெல்லு கலமுமாக நெல்லு முப்பத்தைங்கலமும், நெல்லு முப்பத்தைங்கலமுமாக ஓராட்டைக்குவேண்டும் நெல்லு ஆயிரத்து ஒருபத்து ஐங்கலனேய் எழுகுறுநாழிக்கு நிலன் ஆறேய் அறுமாமுக்காணிமுந்திரிகை அரை முந்திரிகை. திருவாராதனைசெய்யும் பிராமணன் ஒருவனுக்கு நிசதிநெல்லுப் பதக்கு நானாழியாக ஓராட்டைக்கு நெல்லு எழுபத்துஐங்கலத்துக்கு நிலன்னே பதிமாக்காணி அரைக்காணியும், திருக்கோயிலுடையார்கள் எ (எழு) வேலி நிலங்கொண்டுசெய்து வருமான மூன்றினோடு, திருவமுதுகடவவுந் திருமஞ்சனநீரும்,

தண்ணீர் எடுத்தும் நடக்கவும், திருவாராதனைசெய்யும்நம்பிக்கு பரிஸாரகம்செய்யவும், திருமெய்ப்பூச்சுத் தேய்க்கவும் விதானம் பிடிக்கவும் உட்பட வேண்டுமான இரண்டினுக்குந் நிசதிநெல்லு குறுணியிருநாழியாக ஓராட்டைநாளைக்கு நாற்பத்தைங்கலத்திற்கு நிலம் முக்காலே அரைமா அரைக்காணி. திருப்பள்ளித்தாமம் பறித்துத்தொடுப்பார் மூவர்க்கு நிசதிநெல்லு குறுணி நானாழியாக ஓராட்டைக்கு நெல்லு நாற்பத்தைங்கலத்துக்கு நிலம் நாலே அரைமா அரைக்காணி; ஒருமுறந் திருவலகிட திருமெழுக்கிடு வார்க்கு நிசதிநெல்லு குறுணி நானாழியாக ஓராட்டைக்கு நெல்லு நாற்பத்தைங்கலத்துக்கு நிலன் காலே அரைமா அரைக்காணி.”

என்னும் கல்வெட்டுப்பகுதியால் அறியத்தகும்.

[தொடரும்]

இராமாவதார இரகசியம்

ஸ்ரீ. N. R. கிருஷ்ணஸ்வாமிஐயங்காரவர்கள் B.A., B.L., மதுரை.

“நின்செய்கை கண்டு நினைந்தனவோ நீண்மறைகள்
உன்செய்கை அன்னவைதான் சொன்ன வொழுக்கினவோ
என்செய்கேன் முன்னம் அறஞ்செய்கை யெய்தினர்
பின்செல்வ தில்லாப் பெருஞ்செல்வ நீதந்தாய்”

திருமாலே இராமபிரானாக அவதரித்தான் என்பது கம்பன் முடிவு. இதை நன்றாக உறுதிப்படுத்த, உன் அவதாரத்துக்கு எவ்வளவோகாலத்துக்குமுன் மஹான்களான ருஷிகளால் கண்டு அந்தேவாசிகளுக்கு ஓதிவைக்கப்பெற்ற வேதசாகைகள், பின்னால் நீ அவதரித்துச் செய்யப்போகும் செயல்களை ஞானக்கண்ணால் கண்டு அவைகளுக் கிணங்கவே விதிவிலக்குக்கள் இருக்கவேண்டும் என்று அமைத்தனவா? அல்லது அவைகளை ஓதி அவைகளின் படி நீ ஒழுகுகிறாயா? என்ற ஐயத்தை எழுப்பி, வேதபுருஷனும் இவனிட்ட வழக்காகநின்று இராமாவதாரத்தில் இவனொழுக விருக்கும் திருவுள்ளத்தின் குறிப்பறிந்துதான் தர்மாதர்மங்களின் ஸ்வரூபங்களை நிர்த்தாரணம் செய்யவேண்டியவனாக இருக்கிறானென்பது தெளியக்கிடக்கிறது என்கிறான். இராமனே பரம் பொருள் என்பதில் கம்பனுக்கு ஐயமில்லை. இவன் நூலுக்கு “இராமாவதாரம்” என்று பெயரிட்டதும் அதுபற்றித்தான்.

வருங்காலப் புத்தகாலயங்கள்*

[கே. மா. சிவராமன் அவர்கள் B. A., உதவிக்காரியதரிசி,
சென்னைப் புத்தகாலயப் பிரசாரசங்கம்]

எல்லாநாடுகளிலும் பண்டைக்காலந்தொடங்கியே புத்தகாலயங்கள் இருந்துவருகின்றன. அவைகளில் அடங்கியவை சுவடிகளும் கையெழுத்துப்பிரதிகளுமே. இவை பழுதுபடாமலும் தவறிவிடாமலும் இருக்கும்பொருட்டுப் புத்தகாலயபரிபாலகர்கள் கடுமையான விதிகளை அநுசரித்துவந்தார்கள். உதாரணமாக, மேல்நாடுகளிலே புத்தகங்களைக் கைதிகளைப்போல அவற்றின் இருப்பிடங்களிலேயே பிணைத்திருந்தார்கள் என்பதைக் கேட்க உங்களுக்கு ஆச்சரியமாயிருக்கும். ஆனால் அது உண்மை.

அச்சடிக்கும் முறை கண்டுபிடித்தபிறகு புத்தகங்கள் எளிதிற் கிடைக்கலாயின. விலை என்னவோ அதிகம்தான். ஆதலால் அரசர்களும் பிரபுக்களுமே அவைகளை வாங்கி அவரவர் வீடுகளிலே சிறு புத்தகாலயங்களை நிறுவமுடிந்தது. ஆனால் பிரபுக்கள் அவற்றைப் படிப்பதில்லை. அன்னியர் உள்ளேகூட நுழையக் கூடாது. ஆகையால் புத்தகாலயங்கள் இருந்தும் பயனில்லாமலிருந்தது. இதைப்பற்றி உங்களுக்கு ஒரு கதை சொல்லுகிறேன்.

பாரசீகப்பிரபு ஒருவன் அதிகவிலைகொடுத்து ஒரு புத்தகத்தை ஏலத்தில் வாங்கினான். அதைக்கண்ட அவன் நண்பனொருவன், 'ஏன் அந்தச் சாதாரணமான புத்தகத்துக்கு அதன் மதிப்புக்குப் பலமடங்கு அதிகமான விலைகொடுத்து வாங்கினாய்?' என்று கேட்டதற்கு அப்பிரபு, 'என் புத்தகாலயத்தில் அழகாகப்

* சென்னை அகிலஇந்தியரேடியோநிலையத்திலிருந்து ஒலிபரப்பப்பெற்ற இது, அந்நிலையத்தாரநுமதிபெற்று இங்கு வெளியிடப்பெறுகிறது.

வைண்டுசெய்யப்பட்ட புத்தகங்கள் ஒரு அலமாரி நிறைய இருக்கின்றன. ஆனால் அதிலே சிறிது இடம் காலியாகஇருக்கிறது. பார்ப்பவர்களுக்கு அது மிகவும் விகாரமாக இருக்கிறது. அந்த இடத்தையும் நிரப்பிவிட்டால் மிகவும் அழகாக இருக்குமென்று வெகுநாளாக மற்றப் புத்தகங்களுக்கு அழகில் இணையான ஒரு புத்தகத்தைத் தேடிக்கொண்டிருந்தேன். அத்தகைய புத்தகம் இன்றைக்குத்தான் அகப்பட்டது' என்று மிகவும் குதூகலமாகப் பதிலளித்தான். இப்பிரவுவைப்போலத்தான் அக்காலத்திலே பலரும் வெளித்தோற்றத்திற்காகவே புத்தகங்களைச் சேகரித்து வைத்திருந்தார்கள் என்று சொல்வது மிகையாகாது.

நம் நாட்டிலும் அரசர்களும், ஜைனசங்கத்தாரும், மடாதிபதிகளும் ஓலைச்சுவடிகளைச் சேர்த்துப் பாதுகாத்துக்கொண்டுவந்திருக்கின்றனர். தற்காலத்தில் திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் முதலிய மடங்களிலும் தஞ்சாவூர் ஸரஸ்வதிமஹாலிலும் உள்ள பழங்காலப் புத்தகாலயங்கள் அதற்குச் சான்றாக இருக்கின்றன.

இம்மாதிரி பரம்பரையாகப் புத்தகாலயபரிபாலகர்கள் புத்தகங்களைக் காப்பதையே பிரதானமாகக் கருதிவந்ததால் இப்பொழுது கூட இக்காவல்புரியும் உணர்ச்சியே மேலோங்கிநிற்பதைப் பின் சொல்லப்படும் நிகழ்ச்சியால் அறியலாம்.

ஒருகால் நானும் என் நண்பர் ஒருவரும் புதிதாக அமைக்கப்பட்ட ஓர் உயர்தரகலாசாலைப் புத்தகாலயமொன்றைப் பார்வையிடப்போனோம். என் நண்பர் மேல்நாட்டுக்குச் சென்று, சிறந்த அநுபவம் வாய்ந்த புத்தகாலய பரிபாலகர். கலாசாலைத் தலைவர் ஒரு சிறந்த தத்துவசாஸ்திரநிபுணர். அவர் எங்களை மனமுவந்து வரவேற்றுக் கட்டிடத்தைச் சுற்றிக்காண்பித்தார். பிறகு ஓர்

இருண்ட இடைகழிவழியாக அழைத்துச்சென்று தம் அறையில் அமரச்செய்தார். அவர் மாணவர்களின் உபயோகத்திற்காக ஏற்படுத்திய புத்தகாலயத்திற்குச் செய்த செலவைப்பற்றியும், தகுந்த புத்தகங்களைச் சேகரிக்கப் பட்ட பாட்டைப்பற்றியும் பெருமையாகப் பேசிவிட்டு, 'மாணவர்கள் அதிகமாக அப்புத்தகாலயத்தை உபயோகப்படுத்துவதில்லை' என்று சொல்லி வருத்தப்பட்டார். எங்களுக்கோ இது மிகவும் ஆச்சரியத்தைவிளைவித்தது. கட்டடத்தின் மூலைமுடுக்கெல்லாம் சுற்றிப்பார்த்த எங்கள் கண்களில் இவர் குறித்த புத்தகாலயம் புலப்படாததுதான் இதற்குக் காரணம். இதை உணர்ந்த அந்தத் தலைவர், 'ஐயா! என்ன? நீங்கள் என் புத்தகாலயத்தைப் பார்க்கவில்லைபோல் இருக்கிறது?' என்று சொல்லிக்கொண்டே மறுபடியும் எங்களை அந்த இருண்ட இடைகழிக்கு அழைத்துச்சென்றார். அவ்விடத்திலே கூர்ந்துநோக்கிய பொழுது, சுவரில் உயரமாகப் பதித்துவைக்கப்பட்ட கண்ணாடி அலமாரிகளும், அவைகளில் ஒழுங்காக அடுக்கிவைத்திருந்த புத்தகங்களும் தோன்றின. ஆனால் வெளிச்சம் அதிகமாக இல்லாததனால் புத்தகங்களின்மேற் பொறிக்கப்பட்டிருக்கும் அவைகளின் பெயரைக்கூடச் சரியாகப் படிக்கமுடியவில்லை. என் நண்பர் அந்தத் தலைவரைப்பார்த்து, 'என் அவ்வளவு உயரத்தில் அலமாரிகளை வைத்திருக்கிறீர்கள்?' என்று கேட்டதற்கு அவர், 'ஐயா! மாணவர்கள்கண்களில் இப்புத்தகங்கள் பட்டால் சும்மாவிடமாட்டார்கள். அதுவேண்டும், இதுவேண்டும் என்று எப்பொழுதும் தொந்தரவு செய்துகொண்டேயிருப்பார்கள். மேலும், புத்தகங்கள் திருட்டுப் போகவுங்கூடும்' என்று பதிலளித்தார். ஐந்துநிமிஷங்களுக்கு முன் மாணவர்மேல் குறைகூறினவர் இவரல்லரோ? இவ்வாறேதான் நம் நாட்டிலுள்ள வாசகசாலைகள் பெரும்பாலும் இருக்கின்றன.

இவ்வாறில்லாமல் வருங்காலப் புத்தகாலயங்களின் நோக்கமும் அமைப்பும் முழுவதும் மாறுபடவேண்டும். புத்தகங்கள்மூலம்

மக்களின் அறிவை விருத்திசெய்வதையே தனிப்பெருமநோக்க மாகக்கொண்டு புத்தகாலய பரிபாலகர்கள் உழைக்கவேண்டும்.

இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு உள்ள உபாயங்கள் பல. அவைகளில் முக்கியமான சிலவற்றை இப்பொழுது விவரிக்கிறேன்:

மக்களின் விருப்பத்தையும் சௌகரியத்தையும் தகுதியையும் நோக்கிப் புத்தகங்களைச் சேகரித்தல்வேண்டும். ஒருதடையுமில்லா மல் புத்தகாலயத்திற்குள் சுயேச்சையாகத் திரிந்து, தாம்விரும்பிய அளவு மனம்போனபடி தேனையுண்டு களிக்கும் தேனீக்களைப் போல் வாசகர்கள் தங்களுக்கு ஏற்ற புத்தகங்களைத் தாங்களே நாடி எடுத்துக்கொண்டு படித்துமகிழ வசதிகள்வேண்டும்.

இதற்குச் சாதனமாக ஒரு சிறந்த முறையில் அப்புத்தகங்களை வகுத்துவைக்கவேண்டும். அப்படிச் செய்தால்மட்டும் குறிப்பிட்ட நூல் எளிதிற் கிடைக்கும். மேலும் அதைச் சார்ந்த பிறநூல்களும் வாசகர்கள்கண்களுக்குச் சட்டெனப் புலப்பட்டு, அவர்கள் அவற் றைத் தொடர்ந்து படிக்க வசதியாக இருக்கும்.

அடுத்தபடி ஒரு நல்ல புத்தக அட்டவணை இருத்தல்வேண் டும். நம் தேசபாஷைகளில் அச்சடிக்கப்படும் புத்தகங்களில் அநேகம் இரண்டு அல்லது மூன்று சேர்ந்து ஒருங்கே பைண்டு செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் சில அரியவிஷயங்கள் சற்றும் எதிர்பார்க்கக் கூடாத புத்தகங்களிலே புதைந்துகிடக்கின்றன. இவைகளையெல்லாம் வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டுவரு மாறு, ஒவ்வொரு புத்தகத்திலும் கூறப்படும் விஷயத்தையும், அவற்றை இயற்றிய ஆசிரியரின் பெயரையும், மற்றுமுள்ள விசே ஷக்குறிப்புக்களையும், புத்தகங்களின் உள்ளடக்கங்களையும் அந்தப் புத்தக அட்டவணை விவரிக்கவேண்டும்.

இவ்வித அட்டவணை இல்லாவிட்டால் ஒரு புத்தகாலயத்தி லுள்ள புத்தகங்களை அறிவது சாத்தியமில்லாமற் போகும்.

புத்தகாலயங்களிலே புதுப்புத்தகங்கள் சேர்க்கும்பொழுதெல்லாம் அவற்றைப்பற்றிச் சுருக்கமாக மதிப்புரைகள் எழுதி, தினசரிச்செய்தித்தாள்களில் பிரசுரிக்கவேண்டும். அப்படிச்செய்தால் நூல்களைப் பயில அவாவுள்ளவர்களுக்குப் புத்தகாலயங்கள் பெரிதும் பயன்படும்.

புத்தகாலயத்திற்குள் வாசகர்கள் தாராளமாக நடந்துசெல்ல வசதியிருக்கும்படி புத்தக அலமாரிகளைத் தகுந்த இடைவெளிகள் விட்டு நிறுவவேண்டும். அதோடு ஒவ்வொரு அலமாரியின் தலைப்பிலும், அதன் ஒவ்வொருதட்டிலும் அவற்றிலுள்ள புத்தகங்களுக்குச் சுருக்கமான பட்டிகளைத் தொங்கவிட்டிருத்தல்வேண்டும்.

இவைகளையெல்லாம்விடச் சிறந்தசாதனம் வாசகர்களுக்கு உதவிபுரியும் புத்தகாலயச்சிப்பந்திகளே. அவர்கள் நல்ல அறிவாளிகளும் படிக்கவருவோரிடத்தில் மெய்யன்புடையவர்களும் வீண்கர்வமற்றவர்களும் வாசகர்களின்மனத்தில் மேன்மேலும் படிக்க ஆசையுண்டாக்குபவர்களும் அவர்களுக்கு வேண்டியவற்றை எளிதிலே தெரிந்து தேடிக்கொடுக்கும் இயல்புள்ளவர்களுமாக இருத்தல்வேண்டும்.

இப்படியிருந்தால் பெரிய புத்தகாலயங்களைக்காட்டிலும் தெரிந்தெடுக்கப்பட்ட நல்ல புத்தகங்களையுடைய சிறிய புத்தகாலயங்கள்கூட அதிக உபயோகமாக இருக்கும்.

ஒவ்வோர் ஊரிலும் அவ்வூர் மக்கள் அடிக்கடி திரள் திரளாகக் கூடுமிடத்திலேயே புத்தகசாலையை அமைத்தல்வேண்டும். வாசகர்கள் தங்கிக் கொஞ்சநேரம் பொழுதுபோக்காகப் படிப்பதற்குத் தனி அறை ஒன்றை ஒதுக்கிவைக்கவேண்டும். படிப்பவர்கள் விரைவில் ஆயாசமடையாமல் நீண்டநேரம் படிக்கச் சௌகர்யமான மேஜை நாற்காலிகள் இருத்தல்வேண்டும். அடிக்கடி உபயோகப்

படும் அகராதி போன்ற புத்தகங்களை அவ்வறையிலேயே வைக்க வேண்டும். மேலும், அழகுபடுத்தச் சுவர்களிலே படங்களையும் தொங்கவிடலாம்.

அடிக்கடி பிரமுகர்களைக்கொண்டு பல்வேறுவிஷயங்களைப் பற்றி உபந்நியாசங்களை நடத்தவேண்டும். இதற்காகப் புத்த காலயங்களில் ஒரு தனியறை அமைக்கவேண்டும். இவைகளே வருங்காலப் புத்தகாலயங்கள் அநுசரிக்கவேண்டிய சில முக்கிய மான உபாயங்களாகும்.

இனி வருங்காலப் புத்தகாலயங்கள் என்ன மாதிரியாக இருக்க வேண்டும்? அவற்றிற்கு என்ன ஏற்பாடுகள் செய்யவேண்டும்? என்பதைக் கவனிப்போம்.

நம் நாடுமுழுமைக்கும் முதல்தரமான புத்தகாலயத் திட்டம் ஒன்று வரவேண்டும். பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ளவர்களுக்கு மாத்திரம் படிக்கும் வசதியளிக்க நகரபுத்தகாலயங்கள் 500-ம், ஜில்லாபுத்தகாலயங்கள் 500-ம், கிராமங்களின் உபயோகத்திற்காக தாலூகா புத்தகாலயங்கள் 5000-மும் இருக்கவேண்டும். இதைத் தவிர அடிக்கடி உபயோகத்திற்கு வேண்டாதவையும் விலையுயர்ந் தவையுமான புத்தகங்களை நம்நாட்டுக்குப் பொதுவாயுள்ள ஒரு மத்திய புத்தகாலயம் ஒன்றில் சேமித்துவைத்து வழங்கவேண்டும். இந்த மத்திய புத்தகாலயத்தை நம்நாட்டுத் தலைநகரில் அமைக்க வேண்டும். இதேமாதிரியாக ஒவ்வொரு மாகாணத்தின் உபயோ கத்திற்கென்று மாகாணத் தலைநகரங்களில் இராஜதானிப் புத்தகால யங்களை நிறுவவேண்டும். இவைகளைத்தவிர ஒவ்வொரு பள்ளிக் கூடத்திலும், கல்லூரியிலும் சர்வகலாசாலையிலும், ஆராய்ச்சிக்கழ கத்திலும் அதனதன் தேவைக்கேற்ற புத்தகாலயங்கள் இருக்க வேண்டும்.

எல்லாவிதப் புத்தகாலயங்களும் ஒன்றுக்கொன்று உதவித் தொடர்புகொண்டிருக்குமாறு ஒரு திட்டம் வகுக்கவேண்டும். உதாரணமாக, ஒரு வாசகனுக்குவேண்டிய புத்தகம் ஒன்று அவன் பிரதேச புத்தகாலயத்தில் இல்லை என்று வைத்துக்கொள்வோம். இராஜதானிப் புத்தகசாலையிலிருந்தோ அல்லது மத்திய புத்தகசாலையிலிருந்தோ அல்லது இதர புத்தகசாலைகளிலிருந்தோ அப்புத்தகத்தை வருவித்துக்கொடுக்க வசதிகள்வேண்டும். மேல் நாடுகளில் அமைந்திருக்கும் புத்தகாலயத்திட்டம் இவ்வசதிகளை அளிக்கிறது.

இதற்கு என்னசெலவு ஆகும் என்பதையும் சிறிதுயோசிப்போம். நாம் வகுக்கும் திட்டத்தைப்பொறுத்திருக்கிறது செலவு. உதாரணமாக, நம் இராஜதானியை எடுத்துக்கொள்வோம். அதன் ஜனத்தொகை சுமார் 5 கோடி. இதில் 10 வயதிற்குட்பட்ட ஒன்றரைக்கோடிமக்களை நீக்கிவிடுவோம். மற்றவர்களுக்குத் தலைக்கு எட்டு அணு செலவுசெய்தாற்போதும். ஒரு நல்ல புத்தகாலயத் திட்டம் ஏற்படுத்தலாம். இந்த விகிதத்தின்படி நூற்றெண்பது லக்ஷருபாய்கள்வேண்டும். ஒரு பாதியை மாகாணசர்க்காரும் மற்றொரு பாதியை ஸ்தலஸ்தாபனங்களும் பொறுத்துக்கொள்ள வேண்டும். இந்தப் பணம் செலவுசெய்தால் சராசரி தலைக்கு ஒரு புத்தகமாவது கிடைத்துக்கொண்டேயிருக்கும்படி புத்தகசாலைகளில் வேண்டிய புத்தகங்களை வைக்கலாம்.

கல்விக்காக ஏராளமான செலவுசெய்கிறோம். அது வீணுகப் போகாதிருப்பதற்காக இத்திட்டத்தை வகுப்பது அவசியம். இத்திட்டத்தையொட்டித் தயாரித்த சட்டம் ஒன்று சீக்கிரம் அமுலுக்குவந்து கிராமங்தோறும் புத்தகாலயங்கள் அமைந்து, நமது அறியாமையை நீக்கி, நம்மைச் சிறந்த ஜனநாயக மக்களாக ஆக்கிவிடும் என்று நம்புகிறேன்.

பேராசிரியர் ராவ்பகதூர் சுந்தரம்பிள்ளையவர்கள் நினைவுக்குறிப்பு

திருவாளர் ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள், G.B.V.C.

பிள்ளையவர்களுக்கும் எனக்கும் ஏற்பட்ட தொடர்பு.

இவர்களுடைய நினைவுக்குறிப்பை யெழுதத்தொடங்குமுன் இவர்களுடன் எனக்குத் தொடர்பு உண்டானதன் காரணத்தைக் கூறுவது தகுதியாயிருக்கின்றது. அது வருமாறு:—

சுவர்க்கநீக்க முதற்காண்ட மொழிபெயர்ப்புப்பதிப்பு.

நான் பலவருடங்கள் முயன்று விருத்தப்பாவில் மொழி பெயர்த்திருந்த 'சுவர்க்கநீக்க முதற்காண்டத்தை' (Milton's paradise Lost Book I.) சென்னையிலிருந்து பதிப்பித்துக் கொண்டிருந்தகாலத்தில் இடையே, பம்பாய் (Bombay) மிருக வைத்தியக்கல்லூரியில் ஓராண்டு பயிற்சிபெறும்படி சென்னை மாகாணத் துரைத்தனத்தாரால் அனுப்பப்பட்டேன். அப்போது என் நண்பரும் 'பத்மாவதி' முதலிய நூல்களின் ஆசிரியருமான பெருங்குளம் A. மாதவையரவர்கள் என் வேண்டுகோளின்படி அந் நூலின் குறைப்பதிப்பையும் பதிப்பித்து நிறைவேறச்செய்தார்கள். *

---

* அக்காலத்தில் நான் மாதவையரவர்களுக்கு எழுதிய செய்யுட்கடிதம் வருமாறு.

> இன்சுவர்க்க நீக்கத்துக் கியான்பெற்ற தாயாக
> மன்செவிலித் தாயானாய் மாதவா! முன்சொலந்நூற்
> கியான்கொண்ட அன்புக் கிரட்டிபூண் டாதரிப்பாய்
> மீன்கொண்ட நீர்ப்புவியின் மேல்.

[நீர்ப்புவி—கடல் (சூழ்ந்த) பூமி.]

அந்நூலுக்கு முகவுரைபெறச் செய்த முயற்சி. (1)

அச்சிட்டுமுடிந்த அந்த நூலைத் தக்காரொருவருடைய முகவுரையுடன் வெளியிடக்கருதி, அக்காலத்திற் பல்கலைக்கழகப்பட்டதாரிகளுக்கு அரசு (Prince of graduates) எனப் பேர்பெற்றிருந்த பூண்டி அரங்கநாதமுதலியாரவர்களிடம் சுவர்க்கநீக்க அச்சுப்பிரதியொன்றைக் கொடுத்து அதற்கு முகவுரையளிக்கும்படி வேண்டிக்கொண்டேன். அவர்கள் அந்நூலின் ஆங்கிலமூலத்திற் சில பகுதிகளைக் குறிப்பித்து அப்பகுதிகளுக்குரிய மொழிபெயர்ப்புப்பகுதிகளை வாசித்துக்காட்டச்சொல்லியபடி செய்தேன். அதன்மேல், அவர்கள் முகவுரையெழுதியனுப்புவதாக வாக்களித்து என் முகவரியை (Address)க் கேட்டுத் தங்கள் குறிப்புப்புத்தகத்திற் பதிந்துகொண்டார்கள்.

சிலமாதங்கள் சென்றும் அவர்கள் முகவுரைவாராததனால், அவர்களுடைய உயர்குணங்களை விவரிக்கும் சில பாட்டுக்கள் அடங்கிய நினைப்பூட்டுக்கடிதம் அனுப்பினேன். *

அவர்கள் முகவுரையளிக்காமலே இறைவன் திருவடிநீழலெய்தினார்கள்.

---

* அப்பாட்டுக்களின் கடைசிப்பாட்டு நினைவிலிருக்கிறது. அது வருமாறு:—

நான்முகமன் சேடன்பல் நாவினும்சொல் லரியபல நலமுற் றோய்க்கு
யான்முகமன் இயம்புவதென்? எனக்குவாக் களித்தபடி இம்மண் அன்றி
வான்முகம தினுமதிக்கும் படிசுவர்க்க நீக்கப்பேர் மருவு நூற்கு
நூன்முகம தாஎழுதி உனதபிப்பி ராயம் உய்ப்ப நுதலு வாயே.

[நான்முக மன் - பிரமன். சேடன் - ஆதிசேடன்: முகமன் - துதிமொழி. இயம்புதல் - சொல்லுதல். வான் முகமதின் - தேவலோகத்தில். நூன்முகம் - முகவுரை. உய்ப்ப - அனுப்ப. நுதலுதல் - கருதுதல்.]

முகவுரைபெறும் முயற்சி. (2)

இந்தவிவரங்களை நண்பர் அ. மாதவையரவர்களிடம் சொல்லி இனிப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளையவர்களிடம் முகவுரை பெற விரும்புகின்றேன். அதற்காகத் திருவநந்தபுரத்துக்குப்போய் அவர்களைப் பார்ப்பதற்கு 'விடுமுறை' (Leave) பெறவேண்டியிருக்கிறதென்று சொன்னேன். அவர்கள் 'விடுமுறைபெற வேண்டியதில்லை. பிள்ளையவர்களுக்கும் எனக்கும் மிகுந்த பழக்கமுண்டு. சுவர்க்கநீக்க முதற்காண்ட அச்சுப்பிரதியொன்றை அவர்களுக்கனுப்பி அவர்கள் முகவுரையை வாங்கித்தருவேன். நீங்கள் யாதொருமுயற்சியும் செய்யவேண்டியதில்லை' என்று சொல்லிக் கடிதத்துடன் ஷெ நூல் அச்சுப்பிரதியொன்றையும் பிள்ளையவர்களுக்கு அனுப்பினார்கள். சில மாதங்கள் சென்றபின் ஐயரவர்களை நான் சந்தித்தபோது, 'பிள்ளையவர்கள், "நூல்களுக்கு முகவுரையளிப்பவர்கள், நூல்களின் தகுதியன்றி நூலாசிரியர்பாலுள்ள தாட்சிணியம் காரணமாகவும் முகவுரை அளிப்பதுண்டு. இந்த நூல் (சுவர்க்கநீக்க முதற்காண்டம்) தகுதிமட்டும்காரணமாகவே முகவுரைபெறுதற்குரியது. ஆதலால் இதற்கு முகவுரை எழுதுவதைக்காட்டிலும் ஒரு பிரபலமான பத்திரிகையில் மதிப்புரை (Review) எழுதி வெளியிடுவதே சிறந்தது. அதை நான் அவகாசம் வாய்த்தவுடன் செய்வேன்" என்ற கருத்துப்பட எழுதியிருக்கிறார்கள்' என்று சொன்னார்கள்.

குற்றாலச்சந்திப்பு.

இதன்பின் ஒருசமயம் நான் குற்றாலத்துக்குப்போனபோது, பிள்ளையவர்கள் சாரற்காலவாசமாக அங்கே வசிக்கிறார்களென்று கேள்வியுற்றேன். அவர்களைத்தெரிந்த ஒரு நண்பரிடம் அவர்களை நான் காணவேண்டியிருக்கிறதென்று சொன்னபோது, நண்பர் 'அவர்கள் அருவிக்குமேலேயுள்ள செண்பகாடவிக்குப் போயிருக்கிறார்கள். அங்கே போய்ப் பார்க்கலாம்' என்று சொல்லி என்னைக்

கூட்டிக்கொண்டுபோனார். அவர்கள் இருக்குமிடத்தை நெருங்கிய போது, ஒரு கூட்டமத்தியிலிருந்த அவர்களைச் சுட்டிக்காட்டி, அவர்களே சுந்தரம்பிள்ளையவர்களென்று தெரியச்செய்தார். அவர்களை அணுகி நான் வணக்கஞ்செய்தபோது, என்பேரைச்சொல்லி 'வாருங்கள்' என்று வரவேற்றார்கள். அப்போது, முன் என்னைப் பார்த்திராத இவர்களுக்கு என்பேர் எப்படித்தெரிந்ததென்றெண்ணிச் சற்றுநேரம் திகைத்தபின், என்னைத் தூரத்தே கண்டபோது நான் யாரென்று பக்கத்திலிருந்தவர்களைக்கேட்டுத் தெரிந்திருப்பார்களென்று ஊகித்துணர்ந்து திகைப்புத் தீர்ந்தேன்.

நெல்லைச்சிலேடைவெண்பாப் பொருள்கூறியது.

பல இடங்களிலுமிருந்து சாரற்காலவாசிகளாக வந்திருந்த உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் பெரிய வக்கீல்கள் பிரபுக்கள் முதலியோர் பலர், அவர்கள் எதிரில், அவர்கள்முகநோக்கி அவர்களுடைய அறிவும் இனிமையும் நிறைந்த பொருள்பொதிந்த மொழிகளைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். பிள்ளையவர்கள் அங்கிருந்தவர்களுக்கு என்னை அறிமுகஞ்செய்விப்பாராய், 'இவர்கள் ஆங்கிலமும் தமிழும் பயின்றவர்கள். ஆங்கிலம் படித்தோருள்ளே பெரும்பாலார், தமிழை நுனிப்புல்மேய்ந்தாற்போல இலேசாகப் படித்துவிட்டுத் தக்க தமிழ்ப்புலமையுடையராக நடிப்பார்கள். இவர்கள் அவர்களுள் ஒருவரல்லர். சிரத்தையுடன் சிரமப்பட்டுத் தமிழில் இலக்கண இலக்கிய நூல்களை நன்றாகக் கற்றவர்கள். இவர்கள் இருபதுவயசுக்குமுன் இயற்றி, இவர்களுக்குப் பல உயர்ந்த இலக்கியங்களில் உள்ள ஆராய்ச்சிவன்மையைக்காட்டும் குறிப்புரையுடன் வெளியிட்டிருக்கிற நெல்லைச்சிலேடைவெண்பா என்ற நூலினால், இவர்கள் பாவலர்வரிசைகளிலும் பண்டிதர்வரிசைகளிலும் முதல் வரிசையில் வைத்தெண்ணத்தக்கவர்களென்பது விளங்கும்' என்று கூறி, என்னை நோக்கி இவர்களுக்கு 'நெல்லைச்சிலேடைவெண்பாவில் ஒருபாட்டைப் படித்துப் பொருள்கூறுங்கள்' என்றார்கள். அவர்கள் கூறியது எனக்கு ஒரு சோதனையாயிருந்தது. ஏனெனில்,

நெல்லைச்சிலேடைவெண்பா, தேர்ந்த புலமையுடையார்க்கும் அவர்களை ஆசிரியராகக்கொண்டு உயர்ந்தவகுப்பில் படிப்பவர்களுக்கும்* பயன்படவேண்டுமென்று கருதிப் பண்டிதரஞ்சகமாக இயற்றப்பெற்றது. அதைச் சாதாரணமான கல்விப்பயிற்சியுடையவர்கள் ரசிக்கச்செய்வது எளிதானகாரியமன்று. ஆயினும், பிள்ளையவர்கள் ஆணையை இயன்றவரை திருப்திகரமாக நிறைவேற்றுதற்கு உபாயம் மேற்குறித்தநூலில் ஒரு விநோதமானபாட்டைத் தெரிந்தெடுத்து விளக்கிக்கூறுதலேயென்று துணிந்தேன். அப்படித் தேர்ந்தெடுத்துப் படித்துக்காட்டிப் பொருள்கூறிய பாட்டு,—

"'தினந்தோறும் ஒருகலைதேய்ந் தொழிந்துபோவாயாக' என்று தக்கப் பிரசாபதியாற் சபிக்கப்பட்டுப் பதினாறுகலைகளையுடைய சந்திரன் பதினைந்துகலைகள் தொலைந்து ஒருகலைமட்டும் எஞ்சியிருந்தபோது, சிவபிரானிடம்சென்று 'இந்த ஒருகலையையும் இழந்தால் இறந்திடுவேன் என்னைக் காப்பாயாக' என்று அபயமிட்டுக் காலில்விழுந்து வணங்கினான். 'இனி இந்தக்கலையை இழப்பாயல்லை. அம்மட்டோ, தினந்தோறும் ஒருகலை வளரப்பெறுவாய்' என்று வரம் அளித்தருளித் தம் காலில்விழுந்தவனைத் தூக்கியெடுத்துத் தம் தலைமேல்வைத்துக்கொண்ட பித்தனாரும் காந்திமதியம்பிகையைத் தம் தேகத்தில் இடப்பாகத்திற் கொண்டவரும் நெல்லையப்பரென்னும் திருநாமமுடையவருமான சிவபெருமான் வாழும் தலம் யாதெனில், மனைவி முன்னிலையில் (எதிரில்) உள்ள கணவனை நோக்கி 'நீலவண்ணனை (த் திருமாலை) ஒத்திருக்கின்றாய்' என்று (காதல்மொழி) கூறுவதும், (விருந்தினருடன் போசனம் செய்தற்கு அமர்ந்த) கணவன் மனைவியை நோக்கி '(இந்தப் பந்தியிலுள்ள) இலைகளில் (படைக்கவேண்டிய பதார்த்தங்களில்) முதலாவதாக

* தாம் உயர்தரக்கல்விபயிலுங்காலத்தில் நெல்லைச்சிலேடைவெண்பாவை ஒரு பாடபுத்தகமாகப் படித்தவருள்ளே, பல கலாசாலைகளில் தமிழ்ப் பண்டிதராக அமர்ந்திருந்து ஓய்வுபெற்றிருக்கும் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் ஒருவராவர்.

உப்பைப் படைப்பாயாக'* என்று கூறுவதும் நிகழுகின்ற நெல்லைத் தலமே" என்ற பொருளுடைய பாட்டாம். அது வருமாறு:—

கோலஇல்லாள் கொண்டோனைக் கொண்கன் இல்லை முன்னிலையில்
நீலவண னேர்வையெனும் நெல்லையே—சாலச்சோ
காந்திமதி யாகன் கழல்விழச்சென் னிக்கண்வைத்த
காந்திமதி யாகன் களன்.

[கொண்டோன்-கொண்கன் - கணவன். முன்னிலையி னீலவணநேர்வை (1) முன்னிலையில் (எதிரில்) நீலவ(ண்)ணன் (-திருமாலை)நேர்வை - ஒப்பாய்; (2) முன் (முதலாவதாக) இலையில் நீ லவணம் (-உப்பை) நேர் (ஆக) வை(ப்பாயாக). சால - மிகவும். சோகாந்து - துன்பம் அடைந்து. இமம் - பனி. தியாகன் - தருபவன். இமதியாகன் - சந்திரன். கழல் - பாதம். சென்னிக்கண் - தலையில். ஆகன் - ஆகத்தில் (-தேகத்தில்) உள்ளவன். களன் - களம் - இடம்.]

கூட்டம் கலைந்து அவரவர்கள் விடுதிக்குப் புறப்படத்தொடங்கியபோது பிள்ளையவர்கள் என்னைநோக்கி 'நாளை மாலையிலும் நீங்கள் இங்கேவந்து சுவர்க்கநீக்கத்திற் சில பகுதிகளை வாசித்துக்காட்டிப் பொருள்கூறவேண்டும்' என்றார்கள். உடனே (என் மனம் இது முந்தியசோதனையினும் பெரியசோதனையென்று திடுக்குற்றதாயினும், அவர்கள் ஆணையை மறுக்கமாட்டாமல்) 'அப்படியே செய்வேன்' என்றுகூறி விடைபெற்று என்விடுதிக்குச் செல்லும்போது என் மனத்துள்ளே சுவர்க்கநீக்கமும் நெல்லைச்சிலேடைவெண்பாப் போலவே உயர்ந்த தமிழ்ப்புலமையுடையார்பொருட்டே இயற்றப்பெற்றது. இந்தக்கூட்டத்திலுள்ளார் பெரும்பாலார் உயர்ந்த ஆங்கிலப்பயிற்சியுடையாரேயன்றி அத்துணைத் தமிழ்ப்பயிற்சியுடையாரல்லர். இவர்களை எப்படிச் சுவர்க்கநீக்கத்தை ரசிக்கச் செய்வதென்று சிந்தித்து ஒரு முடிவுசெய்தேன்.

*சைவர் இலையில் உப்பை முதலாவதாகப் படைப்பது தொன்றுதொட்டுள்ள வழக்கம்.

சுவர்க்க நீக்க அரங்கேற்றம்.

சாரல்வாசத்திற்காகக் குற்றாலத்திற்கு வந்திருந்த மாணவர்களிடம் மறுநாட்காலையிலே சென்று, சில ஆங்கிலச் சுவர்க்கநீக்கப் (Paradise Lost) புத்தகங்களை இரவலாக வாங்கிக்கொண்டு மாலையிலே குறித்தநேரத்தில் முந்தின தினத்தில் எல்லாரும் கூடியிருந்த இடம் போய்ச்சேர்ந்தேன். அங்கே கூடியிருந்தவர்களில் முக்கிய மாணவர்களிடம் சுவர்க்கநீக்க ஆங்கிலப்பிரதிகளைக் கொடுத்து, நூலின் ஆரம்பப்பகுதியைப் படிக்கும்படி வேண்டிக்கொண்டேன். அவர்கள் படித்தபின், என்னிடமிருந்த சுவர்க்கநீக்கப்பிரதியில் அந்தப்பகுதிக்குரிய மொழிபெயர்ப்புப்பகுதியைப் படித்துக் காட்டினேன். அவர்கள், 'மூலநூற்கருத்துக்கள் கூடுதல் குறைதல் மாறுதலின்றி மொழிபெயர்ப்பில் விளக்கமாகக் கூறப்பட்டிருப்பதைத் தெரிந்து மகிழ்வுற்றோம்' என்று கூறினார்கள். அவர்களெல்லாருக்கும் என் நன்றியைத் தெரிவித்தேனென்பது கூறவேண்டியதில்லை.

சென்னைச் சந்திப்பு.

பிள்ளையவர்களைக் குற்றாலத்திலே சந்தித்ததற்குப் பின்பு வந்த கிறிஸ்த்மஸ் விடுமுறைக்காலத்தில், ஒருநாள், அவர்களைச் சென்னையிற் சந்திக்கும்படி வாய்த்தது. அப்போது அவர்கள் வெளியிட்ட கருத்துக்களைத் தழுவி நான் எழுதியதே 'இராமாயண உள்ளுறை பொருளும், தென்னிந்திய சாதிவரலாறும்' என்ற ஆராய்ச்சிநூல். *

சுவர்க்கநீக்கநூலுக்கு முகவுரை (Introduction) அளிப்பதாக வாக்களித்திருந்தபடிசெய்யாமல் இவ்வுலகவாழ்வை நீத்த முதலியாரவர்கள்போலவே, பிள்ளையவர்களும், அந்த நூலுக்கு

* இதன் முதற்பதிப்பு, தமிழ்த்தொன்மையாராய்ச்சிக்கழகத்தாராலும் இரண்டாம்பதிப்பு தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தாராலும் வெளியிடப்பட்டிருக்கின்றன.

விமரிசனம் (Review) எழுதி வெளியிடுவதாக வாக்களித்திருந்தபடிசெய்யுமுன் சிவசாயுச்சியமடைந்துவிட்டார்கள்.

அச்சிட்டுமுடிந்ததற்குப்பின்னும் வெளியிடப்பட்டதற்கு முன்னுமாக, முகவுரைக்காகப் பலவருடங்காத்திருந்த சுவர்க்க நீக்க முதற்காண்டம், அரங்கநாதமுதலியாரவர்கள் பேராசிரியர் சுந்தரம்பிள்ளையவர்கள் ஆகிய இருபெரியாருள் ஒருவருடைய முகவுரையும் பெறும்பாக்கியமில்லாததானாலும், சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் அளித்த சிறப்புப்பாயிரக்கவியையே முகவுரையாகக்கொண்டு வெளியிடப்பட்ட பின்பு, தனித்தமிழ்ப்பண்டிதர் தலைவர் மகாமகோபாத்தியாய சாமிநாதையரவர்கள், ஆங்கிலத் தமிழறிஞர்தலைவர் டாக்டர். ஜி. யு. போப்பையரவர்கள் ஆகிய இருபெரியார்முதலியோருடைய உயர்தரமதிப்புரைகள் பெற்ற பெரும்பாக்கியமுடையதாயிற்று.

பிள்ளையவர்களுடைய கவிவன்மை, பொதுவாக மனோன்மணீயம் என்ற நூலினாலும், சிறப்பாக அந்த நூலின் ஒரு பகுதியாகிய சிவகாமிசரிதையாலும் விளங்கும். அவர்கள் இயற்றி வெளியிட்ட திருஞானசம்பந்தர்காலநிர்ணயம், நூற்றொகைவிளக்கம் என்பவைகளாலும், அவர்கள் மறைந்தபின் அவர்களுடைய கருத்துக்களைத் தொகுத்து நான் வெளியிட்ட இராமாயண உள்ளுறைபொருளும் தென்னிந்திய சாதிவரலாறும் என்ற நூலினாலும் அவர்களுடைய அறிவுப்பேராற்றலின் அளவையும் மிகவும் உயர்வான ஆராய்ச்சித் திறமையின் அளவையும் தெரியலாம்.

பிள்ளையவர்கள், சுவர்க்கநீக்கநூலின் தற்சிறப்புப்பாயிரத்திலுள்ள அவையடக்கக்கவிகளில் ஒரு குறித்த கருத்துடைய பாட்டைக் கூறச்சொல்லியபடி நான் கூறியபோது அதன் நயத்தை விதந்தெடுத்துக்கூறிப் பாராட்டி எனக்கு உவகையும் ஊக்கமும் ஊட்டினார்கள். அந்தப் பாட்டை இதன்கீழே தந்து இந்த நினைவுக் குறிப்பை முடிக்கின்றேன்.

இந்நூலில் (சுவர்க்கநீக்கத்தில்) உள்ள கருத்துக்களெல்லாம் ஒரு மகாகவி (மிலிட்டன் Militon) கருத்துக்கள். அந்தக் கருத்துக்களைப் புலப்படுத்துவனவாக இந்நூலிலுள்ள சொற்களெல்லாம் ஒரு முனி (அகத்தியமுனி)யின் சொற்கள். (எந்த நூலிலும் கருத்துக்களும் சொற்களும் தவிர உள்ளது பூச்சியமே) அந்நியர்கருத்துக்களும் சொற்களுமேயுள்ள இந்த(ச் சுவர்க்கநீக்க) நூலில் எனக்குச் சொந்தமானது உண்டென்றும் அதிலுற்ற குற்றங்களைப் பொறுக்கவேண்டுமென்றும் கூறுவது (மலடி குழந்தையின் அந்தக் கேட்டைக் கவனிக்கவேண்டாமென்றுகூறுவதுபோல) அறியாமைப்பாலதாம் என்ற பொருளுடைய அந்தக் கவிவருமாறு:—

கருத்தெலாம்ஒரு வான்கவி கருத்துக்கள், கருத்தை
விரித்த சொல்லெலாம் ஒருமுனி வியன்சொற்கள் ஆக
உரித்தின் எற்கிதிற் கொளத்தக்க துளதென்றும் உதனில்
தரித்த கோதுகள் பொறுக்கென்றும் சாற்றல் பேதைமையே.

[வான் - பெருமை(யுடைய). கவி - கவிஞன். வியன் - சிறப்பு. (உடைய). உரித்தின் - உரிமையாக. எற்கு - எனக்கு. உதனில் இங்கே உரிமையாகக் கொண்டதில் என்ற பொருள்படநின்றது. தரித்தல் - தங்குதல். கோது - குற்றம். பொறுக்கென்று - பொறுக்க (—பொறுத்துக் கொள்க) என்று]

(தமிழ்மொழியை அகத்தியன்மொழியென்பது மரபு. தமிழ்மொழி, 'அகத்தியன் பயந்த செஞ்சொல்'— என வில்லிபாரதத்திலும், அகத்தியன், 'தென்தமிழ் உரைத்தோன்', 'என்றுமுள தென்தமிழ் இயம்பியிசை கொண்டான்' எனக் கம்பராமாயணத்திலும் கூறப்பட்டிருப்பது காண்க.)

பெருங்கவிஞர் பிரிவு

தமிழ்ப்பெருங்கவியும் முதுபெரும்புலவருமான வெள்ளகால் ராவ் சாஹிப். வே. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள், G B.V C., நிகழும் விய ஆண்டு புரட்டாசிமீ 26 (12—10—46)உ சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தமைதெரிந்து வருந்துகிறோம்.

இவர், திருக்குற்றாலத்தையடுத்துள்ள வெள்ளகால்நகரத்துத் தொண்டை மண்டலவேளாளருள் அரசர்க்கு முடிசூட்டும்பெருமைவாய்ந்த கொண்டை கட்டிகள்மரபினரான திருத்தகுசெல்வர் பழநியப்பமுதலியார்தவப்புதல்வ ராய்க் கி. பி. 1857ஆம் ஆண்டு ஆகஸ்டுமீ 14உ ஆழ்வார்குறிச்சியிற் பிறந்தவர். இவர் பாட்டனார் சுப்பிரமணியமுதலியார் மதுரையையடுத்துள்ள சோழவந்தானிலிருந்து வெள்ளகாலிற் குடிபுகுந்து, அக்காலத்துத் திருநெல் வேலியில் நவாபுஅரசர்களுக்குப் பிரதிநிதிகளாய் நாடாட்சிபுரிந்த ஆழ்வார் குறிச்சி ஆறை அழகப்பமுதலியார், திருநெல்வேலி மேடைதளவாய் திரு மலையப்பமுதலியார் குடும்பங்களுடன் தொடர்புபூண்டு மகட்கொடுத்தும் மகட்கொடைநேர்ந்தும் பிரபலம் அடைந்தவர். இவருடைய தந்தை பழநி யப்பமுதலியார், நல்ல செல்வாக்கும் ஊக்கமும் உலகியலறிவும் எளியவர்பால் இரக்கமும் வாய்ந்தவர்; தம் காலத்து அரசினர் மேற்பார்வையிலிருந்த தளவாய் எஸ்டேட்டுக்கு மானேஜராயிருந்து அது பலவகையிலும் மேனிலை யடையச்செய்ததுடன், தாம் வசிக்கும் வெள்ளகால்நகரில் அந்நகரமக்கள் வழிபட்டுய்யுமாறு குற்றாலவிநாயகர்கோயிலும் அதனையடுத்து நகரமக் களுக்குப் பயன்படும்படி நன்னீர்க்கிணறும் நல்லசாலையும் அமைப்பித்துதவி யவர். இவர்கள் வழிவந்த நம் பெருங்கவிஞர், கருவிலேயமைந்த திருவுடைய ராய் இளமையில் திருநெல்வேலித் தெற்குப்புதுத்தெருவிற் கணபதிவாத்தி யார் திண்ணைப்பள்ளிக்கூடத்திற் றமிழ்க்கல்வி பயிலத்தொடங்கினர்; பின் திருநெல்வேலி இந்துகலாசாலையிலும் சென்னைக் கிறிஸ்தவகலாசாலையிலும் ஆங்கிலக்கல்விபயின்று சிறந்தார்; ஆங்கிலமொழிபயிலுங்கால் இவரோடு ஒரு சாலைமாணவராயிருந்தவர் மாஜிமந்திரி T. N. சிவஞானம்பிள்ளையவர்க ளாவர்.

திருநெல்வேலித் தெற்குப்புதுத்தெருத் திண்ணைப்பள்ளிக்கூடத்திற் றொடங்கிய இவர்தமிழ்க்கல்வி, திருநெல்வேலிக் கவிராஜ நெல்லையப்பபிள்ளை யவர்கள் வீட்டுத்தோட்டத்தில் அமைந்த சவுக்கையில் ராஜவல்லிபுரம்

முத்துச்சாமிப்பிள்ளை, அழகியசொக்கநாதபிள்ளை, மு.ரா.அருணசலக்கவிராயர், சென்னிகுளம் அண்ணாமலைரெட்டியார் முதலியவர்களோடு பயிற்சியால் நிறைவெய்தியது. இவரது திருந்திய தமிழ்ப்புலமைக்கும் கவித்துவத்துக்கும் அப்புலவர்குழுவே மூலமெனின் அது மிகையாகாது.

இவ்வாறு ஆங்கிலமொழியோடு ஓங்குசெந்தமிழும் வரன்முறைபயின்று கவியியற்றுமாற்றலும் கட்டுரைவரையும் வன்மையும் மொழிபெயர்க்குந்திறமும் உடையராகிய இவர், பின்னர் விவசாயகலாசாலையிலும் கால்நடைமருத்துவக் கல்லூரியிலும் பயின்று அத்துறைகளிலும் சிறந்த தேர்ச்சியுடையராயினர்; தம் தேர்ச்சிகண்டு, அரசாங்கத்தார் கால்நடைமருத்துவஇலாகாவில் உத்தியோகந்தரப்பெற்றுத் தம் திறமையால் அவ்விலாகாவில் மேலும் மேலும் உயர்பதவியடைந்து, தம் உழைப்பாலும் அவ்விலாகாவிலிருந்து தம் அனுபவத்தாலறிந்தவற்றையும் பிறமொழிநூல்களால் அறிந்தவற்றையும் முறைப்படத்தொகுத்து எளியதமிழ்நடையில் யாவரும் உணரவிரித்தெழுதியுதவிய இந்துதேசத்துக் கால்நடைக்காரர்புத்தகம் முதலிய நூற்பதிப்பாலும் திறம்பட வுயிர்த்தொண்டாற்றி மேலதிகாரிகளால் நன்குமதிக்கப் பெற்றதன்மேலும், சொற்பொருளணிகளோடு பற்பல கற்பனைகளும் விரவிய சுவர்க்கநீக்கமுதற்காண்டம் அகலிகைவெண்பா முதலிய காவியங்களையும், நெல்லைச்சிலேடைவெண்பா அம்பலவாணதேசிகமாலை முதலிய பிரபந்தங்களையும், சருவஜனஜபம் கோம்பிவிருத்தம் முதலிய சிறுநூல்களையும், பலநூறு தனிக்கவிகளையும், கல்விவிளக்கம் முதற்பாகம் ஜான்மில்டனார் சரித்திரம் முதலிய இனியவசனநூல்களையும் இயற்றியுதவி மொழித்தொண்டுபுரிந்தும், திருநெல்வேலித் தாலூகாபோர்டு ஜில்லாபோர்டு முதலியவற்றில் அங்கத்தினராயும் தலைவராயும் இருந்து சிறந்த நாட்டுத்தொண்டுபுரிந்தும் தமிழ்நாடுமுழுவதிலும் உள்ள மடாதிபதிகளும் புரவலரும் புலவரும்பொருளாளரும் பொதுமக்களும் பாராட்டும் பேறு பெற்றார்.

இவரியற்றிய நூல்களுள் கோம்பிவிருத்தம் முதலியவற்றால் கற்பனாசக்தியும், சுவர்க்கநீக்கம் கல்விவிளக்கம் முதலியவற்றால் மொழிபெயர்க்குமாற்றலும், சருவஜனஜபம் முதலியவற்றால் பிறமதத்துவேஷமற்ற சமரசமனப்பான்மையும், அம்பலவாணதேசிகமாலையால் குருபக்திமையும், தனிக்கவித்திரட்டால் மடக்கு யமகம் திரிபுமுதலிய தொடையங்களோடு அரி

தாகிய பொருளையும் இனிதாக விளக்கிச்செல்லும் கவித்துவமும் இவர்பால் எத்துணைச் சிறப்பினவாக அமைந்திருந்தன என்பது நன்குவிளங்கும்.

இவருடைய கவித்துவமும் மொழிபெயர்க்குந்திறமும், பூண்டி அரங்கநாதமுதலியார் புரொபஸர் சுந்தரம்பிள்ளை, சி. வை. தாமோதரம்பிள்ளை, ஜீ. யூ. போப்பையர், மஹாமஹோபாத்யாய சாமிநாதையர், மஹாமஹோபாத்தியாய பண்டிதமணி கதிரேசச்செட்டியார், மஹாவித்வான். ரா. இராகவையங்கார் முதலான பேரறிஞர்களாற் பாராட்டப்பெற்றவை.

தமிழர்கலைச்செல்வமாகிய கம்பராமாயண ஆராய்ச்சியிலே தம் வாழ்நாள்முழுவதையும் செலவிட்டு, இவர் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிட்டு முற்றுவித்த கம்பராமாயணசாரம், இவருதவிய நூல்களுள் தனிச்சிறப்புடையது. அதன் முதல் ஐந்துகாண்டங்கள் திருப்பனந்தாள் ஆதீனகர்த்தர் பொருளுதவிகொண்டு தென்னிந்திய சைவசித்தாந்தநூற்பதிப்புக் கழகத்தாரால் உயர்ந்தமுறையில் தனிப்புத்தகங்களாக அச்சிட்டுவெளியிடப் பட்டுள்ளன. எஞ்சிய இரண்டுகாண்டங்களும் தனிப்புத்தகங்களாக அக்கழகத்தாரால் வெளிவருவதன்முன் இவர்கள் மறைந்தது வருந்தத்தக்கது.

ஆங்கிலமொழியறிவோடு தமிழறிவும் உடையராய் உயர்ந்த அரசாங்க உத்தியோகத்தமர்ந்த தமிழ்ப்பெருஞ்செல்வர் ஒருசிலருள், நடுநிலைதிறம்பா நன்னெறிநின்று தமிழ்ப்புலவரொடு நெருங்கிப்பழகி அவர்தம் தகுதியறிந்து பாராட்டிப் புரந்தும் தமிழ்த்தொண்டு புரிந்தும் புகழ்மிக்க இவர் முன்னெண்ணத்தக்கவராவர்.

இவருடைய தொடர்பும் உதவியும் பெறாத புலவர்களும் பொது நிலையங்களும் சங்கங்களும் கழகங்களும் பத்திரிகைகளும் தமிழ்நாட்டில் இல்லையென்றே சொல்லலாம்.

இவர், பல ஆண்டுகள், சென்னைப் பல்கலைக்கழகத்தும் அண்ணாமலை பல்கலைக்கழகத்தும் பரீக்ஷகராயிருந்தும், தம் வாழ்நாள் முழுதும் மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பரீக்ஷகராகவும் வித்யா விஷய ஆலோசனைஸபையங்கத்தினராகவும் இருந்தும் தாம் மேற்கொண்டபணியினை நன்குபுரிந்திருக்கிறார். இவர் தம் ஆன்மா உடலினின்றுபிரியும்வரை இச்செந்தமிழ்ப்பத்திரிகைக்குச் சீரிய கட்டுரைகளுதவிவந்துள்ளார்; இதனை, இவ்வறுதாபக்குறிப்பு வெளிவரும் இச்செந்தமிழ்ப்பகுதியிலும் இவருடைய கட்டுரை இரண்டு வெளிவருவதுகொண்டு அறியலாம்.

இவருடைய தகுதியினைநன்கறிந்த அரசாங்கத்தார் இவருக்கு ராவ் ஸாஹிப் என்ற விருதளித்துக் கௌரவித்தனர்; சென்னைமாகாணத் தமிழ்ச் சங்கத்தார் அச்சங்கத்தின் எழாவதாண்டுவிழாவில் இவருக்குத் தமிழ்ப் பெருங்கவி முதுபெரும்புலவர் என்னும் பட்டங்களைச் செப்புப்பட்டயங்களு டன் வழங்கிப் பெருமைப்படுத்தினார்கள்; இவருடைய எண்பதாம் ஆண்டு நிறைவு, திருநெல்வேலியில் 1937-ஆம் ஆண்டு ஆகஸ்டு மீ 1௳ மஹாமஹோ பாத்தியாய சாமிநாதையரவர்கள் தலைமையிற் பெருங்குழுவினராகத்தொக்க தமிழ்ப்பெருமக்களால் திருவிழாவாகக்கொண்டாடப்பட்டது. அக்காலத்து நிகழ்ந்த பாராட்டுரைகள், தமிழ்நாட்டினர் இவரை எவ்வளவு உயர்வாக மதித்தனர் என்பதை நன்குவிளக்கும்.

இவருக்கு, திருமலையப்பமுதலியார் என்று ஒரு சகோதரரும் மூவர் பெண்மக்களும் பழனியப்பமுதலியார் தீத்தாரப்பமுதலியார் என இருவர் ஆண்மக்களும் உண்டு. இவருடைய மூதற்புதல்வர் V S பழனியப்பமுதலியா ரவர்கள் ஆங்கிலமொழியில் ஓங்கியபுலமையோடு நற்குணங்களும் தம் குடும்ப நிலை மேன்மேலும் சிறக்கமுயலும் நன்முயற்சியும் உடையராய் விளங்குகிறார்.

நிறைந்தகல்வியும் நீங்காதசெல்வமும் அமைந்தஒழுக்கமும் உடைய ராய்த் தொண்ணூறாண்டுவாழ்ந்த இப்பெருங்கவிஞர்வரலாறெல்லாம், இவ ரியற்றிய நூல்களாலும், இவரது எண்பதாமாண்டுநிறைவிழாநினைவுமலரா லும், திருவாளர் பாஸ்கரத்தொண்டைமான் (B. A.) அவர்கள் எழுதிஅச் சிட்டு வெளியிட்ட இவர் சரித்திரத்தாலும் நன்கறியலாகும்.

புகழொடுதோன்றி உயர்ந்த தமிழறிஞர், தமிழ்ப்பெருங்கவி, ரசிகர், வசனகர்த்தர், உரையாசிரியர், மொழிபெயர்ப்பாளர், கொடையாளர் என்று உலகுபுகழ வாழ்ந்து, புகழ்நிறுவிமறைந்த இவர் பிரிவு பொதுவாகத் தமிழகத்துக்கும் சிறப்பாக மதுரைத்தமிழ்ச்சங்கத்துக்கும் பல துறையிலும் பெருநஷ்டமாகும். இவரைப் பிரிந்து வருந்தும் மக்கட்கும் சுற்றத்தார்க்கும் நண்பர்க்கும் நம்முடைய ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள் கிறோம்.

இவரது ஆன்மா இறைவனடியிணைநீழலில் எல்லையில்பேரின்பமெய்துக.

பத்திராசிரியர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் 1946-ஆம்௵ மார்ச்சுமீ 9௳ நடத்திய

ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு.

[எண்கள் ரிஜிஸ்டர்நம்பரைக் குறிப்பன.]

பி. ஏ. பரீக்ஷை.

1-வது வகுப்பு.

10 S. இராசமாணிக்கம், ஸெண்ட்ஜோஸப்காலேஜ், திருச்சி.

(முதற்பரிசு ரூபா 50 பெறத்தக்க *தங்கப்பதக்கம்)

2-வதுவகுப்பு.

அமெரிக்கன்காலேஜ், மதுரை:—2, to 5, 7, 8.

ஸெண்ட்ஜோஸப்காலேஜ், திருச்சி:—11, 12, 18, 24, 25, 36, 38, 39.

முனிஸிபல்காலேஜ், சேலம்:—49, 50, 54, 56.

ஸெண்ட்ஸேவியர்காலேஜ், பாளையங்கோட்டை:—65, 66.

மதுரை திரவியம் தாயுமானவர் ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி:—67.

எப். ஏ. பரீக்ஷை.

2-வதுவகுப்பு.

மதுரைக்காலேஜ், மதுரை:—88.

அமெரிக்கன்காலேஜ், மதுரை:—95, 101.

ஸெண்ட்ஜோஸப்காலேஜ், திருச்சி:—113, 120, 121, 126, 127, 131, 132, 136, 138, 144.

முனிஸிபல்காலேஜ், சேலம்:—167, 170, 173, 175, 178.

Govt. College, கோயம்புத்தூர்:— 179, 181, 183, 185, 202, 207, 212.

மஹாராஜாகாலேஜ், புதுக்கோட்டை:—215, 217, 222, 225, 230, 231, 236, 242, 247.

பிரஸிடென்ஸிகாலேஜ், சென்னை:- 257, 259, 267, 268, 270, 276, 279.

Queen Mary's College, சென்னை:—283, 284.

ஸெண்ட்ஜான்காலேஜ், பாளையங்கோட்டை:—291.

மதுரை திரவியம் தாயுமானவர் ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி:—307.

---

*பவுன் முதலியவற்றின் விலையேற்றத்தினால் இச்சங்கத்தின் நிர்வாகஸபையார் 21-6-43-ல் செய்த தீர்மானப்படி முதற்பரிசு ரூபாயாக அளிக்கப்படும்.

மெற்றிக்குலேஷன்பரீக்ஷை.

2-வதுவகுப்பு.

சேதுபதிஹைஸ்கூல், மதுரை:—325, 332, 333, 337.

ஸௌராஷ்ட்ராஹைஸ்கூல், மதுரை:—365, 366, 368, 373, 374, 376.

ஸெண்ட்மேரி ஹைஸ்கூல், மதுரை:—384, 388, 391 to 396, 402, 403, 409 to 411, 416, 418, 420, 425, 429, 433, 435, 461, 477, 485, 487, 488, 491, 497, 498, 499, 502, 504, 507, 509, 511, 513 to 516, 518.

ஸெண்ட்ஜோஸப் கேர்ல்ஸ் ஹைஸ்கூல், மதுரை:—520, 521.

O. C. P. M. Girls High School, தல்லாகுளம், மதுரை:—525, 532, 535, 536, 537, 540, 541, 542, 546, 547,

பசுமலை ஹைஸ்கூல்:—548.

P. K. N. High School, திருமங்கலம்:—549 to 552, 556, 562, 563, 566, 571.

போர்டு ஹைஸ்கூல், உசிலம்பட்டி:—580 to 583.

க்ஷத்திரியவித்யாசாலா ஹைஸ்கூல், விருதுநகர்:—596, 597, 598.

ராஜாஸ்ஹைஸ்கூல், இராமநாதபுரம்:—603, 605, 606, 614, 616, 619, 620, 624, 626, 627, 628.

ஸெண்ட்ஜோஸப்காலேஜ் ஹைஸ்கூல், திருச்சி:—634, 643, 674, 682.

E. R. High School, தெப்பக்குளம், திருச்சி:—704, 709, 710, 713, 716, 721, 724, 728, 730, 731, 733, 736, 737, 738, 740, 745, 746.

பொன்னையாஹைஸ்கூல், பாலக்கரை, திருச்சி;—749, 751, 756, 758, 766, 769, 781, 798.

Holy Cross College, தெப்பக்குளம், திருச்சி:—841.

ஹைஸ்கூல், ஸ்ரீரங்கம்:—866, 868, 869, 876, 883.

போர்டு ஹைஸ்கூல், அரியலூர்:—915.

போர்டு ஹைஸ்கூல், லால்குடி:—926, 929, 930, 932, 933, 937.

பாணாதுரை ஹைஸ்கூல், கும்பகோணம்:—951.

C. M. High School, திருநெல்வேலி:—957, 959, 961, 964, 966, 971 to 977.

ஸ்ரீமந்திரமூர்த்தி ஹைஸ்கூல், திருநெல்வேலி:—978, 980, 982, to 985, 987, 990, 991, 993.

போர்டு ஹைஸ்கூல், திருச்செந்தூர்:—995.

காரனேஷன் ஹைஸ்கூல், ஸ்ரீவைகுண்டம்:—1012, 1013, 1015, 1017, 1020, 1024, 1028.

போர்டு ஹைஸ்கூல், தென்காசி:—1043, 1058.

கோகுலநாத் ஹிந்து மஹாஜன ஹைஸ்கூல், சேலம்:—1064 to 1067, 1070, 1078, 1084, 1087, 1092.

Little Flower High School, சேலம்:—1100, 1101, 1104, 1105, 1110, 1113, 1123, 1128, 1131, 1132.

போர்டு ஹைஸ்கூல், ஆத்தூர்:—1138, 1145, 1146, 1148, 1152, 1154, 1155, 1157, 1160.

போர்டு ஹைஸ்கூல், நாமக்கல்:—1165, 1177.

ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் வித்யாலயம், பெரியநாயக்கன்பாளையம்:—1185, 1186.

மஹாஜனஹைஸ்கூல், ஈரோடு:—1187 to 1190, 1192, 1194 to 1197, 1199, 1200, 1203, 1204, 1208 to 1210, 1212, 1214 to 1216, 1218, 1220, 1224, 1225, 1227 to 1229.

டையமண்டுஜூபிலி ஹைஸ்கூல், கோபிசெட்டிபாளையம்:—1237, 1241.

முனிஸிபல் ஹைஸ்கூல், கூடலூர் N. T:—1246, 1253, 1254, 1256.

ஸெண்ட்ஜோஸப் செக்கண்டரிஸ்கூல், கூடலூர் N. T:—1258, 1263, 1264, 1275, 1277 to 1280, 1282, 1284, 1285, 1290, 1292, 1293, 1297, 1299, to 1301, 1303 to 1306, 1318, 1319, 1320, 1325.

ஸெண்ட் ஆன்ஸ் கேர்ல்ஸ் ஹைஸ்கூல், புதுப்பாளையம், கூடலூர் N T:—1327 to 1332.

மஹாராஜா காலேஜ் ஸ்கூல், புதுக்கோட்டை:—1338, 1368, 1375, 1376, 1382, 1383.

மஹாராணிஸ் கேர்ல்ஸ் ஹைஸ்கூல், புதுக்கோட்டை:—1400, 1401.

C. S. M. ஹைஸ்கூல், புதுக்கோட்டை:—1413.

ஸரஸ்வதி ஹைஸ்கூல், கோனபட்டு;—1442, 1444.

கலியாணசுந்தரம் ஸஹஸ்கூல், தஞ்சாவூர்:—1446 to 1448, 1450 to 1455, 1463, 1468, 1473, 1487, 1492, 1496, 1497.

ஸெண்ட்பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர்:—1526, 1555, 1557.

வீரராகவ ஹைஸ்கூல், தஞ்சாவூர்:—1562, 1564.

ஸர். சிவஸ்வாமிஐயர் ஹைஸ்கூல், திருக்காட்டுப்பள்ளி:—1580, 1581, 1584, 1596, 1601.

ஹிந்து ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்:—1607, 1608, 1609, 1611, 1614 to 1617, 1619, 1622, 1623, 1625, 1627 to 1629, 1631.

C. M. S High School, ஸ்ரீவில்லிபுத்தூர்:—1639, 1641, 1644, 1647, 1653, 1655, 1657, 1659 to 1661, 1668.

போர்டு ஹைஸ்கூல், சங்கரன்கோயில்:—1670, 1672, 1690, 1698, 1703, 1715.

ஊரீஸ் ஹைஸ்கூல், வேலூர்:—1718, 1729, 1745, 1747, 1750 to 1754, 1772, 1773, 1775, 1778 to 1782, 1784, 1788, 1789, 1791, 1795, 1797,

ஷெர்மன் ஹைஸ்கூல், சித்தூர்:—1800 to 1802.

முனிஸிபல் ஹைஸ்கூல், வாலாஜாபேட்டை:—1807.

அப்துல்ஹகீம்ஹைஸ்கூல், ஆற்காடு:—1809.

ஹிந்து ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி, சென்னை:—1813; 1820, 1824, 1825, 1827 to 1830, 1833, 1835, 1836.

ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் ஹைஸ்கூல், தியாகராயநகர்:—1850, 1851, 1855, 1863, 1869, 1878, 1888, 1895, 1909.

T. M. T. V. High School, சென்னை:—1911, 1912, 1914, 1915, 1928, 1930 to 1932, 1934, 1937, 1948.

ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல், சென்னை:—1959, 1961, 1965, 1968, 1970, 1971, 1976 to 1979.

கிறிஸ்டியன் காலேஜ் ஹைஸ்கூல், சென்னை:—2021, 2023, 2024, 2027.

கெல்லெட் ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி, சென்னை:—2061.

P. S. High School, மயிலாப்பூர், சென்னை:—2069, 2071, 2072, 2073.

நாஷனல் கெர்ல்ஸ் ஹைஸ்கூல், மயிலாப்பூர், சென்னை:—2078, 2081 to 2086.

Sir. M. Ct. முத்தையசெட்டியார் ஹைஸ்கூல், புரசபாக்கம், சென்னை:—2089.

கார்ப்பொரேஷன் ஹைஸ்கூல், நுங்கம்பாக்கம், சென்னை:—2099, 2101, 2104.

R. B. C. C. C's High School, பெரம்பூர், சென்னை:—2110, 2127, 2130 to 2132, 2149.

பென்டிக் கேர்ல்ஸ் ஹைஸ்கூல், வேப்பேரி, சென்னை:—2151, 2152, 2156, 2158, 2163 to 2169.

ஸ்ரீஸாரதா வித்யாலயா கேர்ல்ஸ் ஹைஸ்கூல், தியாகராயநகர்:—2175.

லேடி வில்லிங்டன் ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி, சென்னை:—2184, 2186, 2187, 2188, 2191, 2194, 2195, 2197 to 2202.

முனிஸிபல் ஹைஸ்கூல், மாயவரம்:—2205, 2210, 2211, 2215, 2233, 2236, 2240, 2247, 2256, 2259 to 2264, 2266, 2268, 2269, 2272, 2273, 2274, 2276, 2283, 2284.

பிண்டிலே ஹைஸ்கூல், மன்னார்குடி:—2287 to 2293, 2295 to 2310, 2312, 2313, 2314, 2316, 2320, 2321, 2324, 2327, 2328, 2330, 2331, 2334.

நாஷனல் ஹைஸ்கூல், மன்னார்குடி:—2342, 2346, 2352, 2356, 2359, 2363, 2366, 2367, 2370, 2371, 2372, 2374, 2375, 2377, 2378.

போர்டு ஹைஸ்கூல், கூத்தாநல்லூர், தஞ்சாவூர்ஜில்லா:—2382, 2384 to 2390.

ஸ்ரீராமகிருஷ்ணகுருகுலவித்யாசாலை, உத்தரமேரூர்:—2391, 2392, 2395, 2396, 2400, 2403, 2405, 2407.

ஸெண்ட் ஜோஸப் ஹைஸ்கூல், செங்கற்பட்டு:— 2411, 2414, 2416 to 2423, 2426.

ஸெண்ட் கொலம்பாஸ் ஹைஸ்கூல், செங்கற்பட்டு:— 2430 to 2437, 2439.

போர்டு ஹைஸ்கூல், செய்யாறு:—2444, 2451, 2454, 2455.

விக்டோரியா போர்டு ஹைஸ்கூல், பாபநாசம்:—2458, 2461, 2464, 2465, 2469.

ஸெண்ட் ஸேவியர் ஹைஸ்கூல், தூத்துக்குடி:— 2473 to 2476, 2481, 2482, 2484.

போர்டு ஹைஸ்கூல், போளூர் N. A. Dt.—2485, 2486, 2487, 2489 to 2492, 2494, 2496, 2498, 2501 to 2504.

போர்டு ஹைஸ்கூல், ஆரணி N. A. Dt.-2512, 2513, 2516, 2517, 2520 to 2523, 2525, 2530.

ஹிந்துநாடார் விக்டோரிய ஹைஸ்கூல், சிவகாசி:—2534, 2535, 2537 to 2540, 2545, 2546, 2548, 2552, 2553, 2555, 2557, 2560, 2561, 2563, 2566, 2571, 2576.

போர்டு ஹைஸ்கூல், திருவாரூர்:—2584, 2590, 2598, 2603, 2616.

ஷை நன்னிலம்:—2620, 2621, 2626, 2628.

ஷை திருத்துறைப்பூண்டி:—2632, 2641.

முனிஸிபல் ஹைஸ்கூல், விழுப்புரம்:—2677, 2678, 2680.

ஹைஸ்கூல், கோபாலசமுத்திரம்:—2684, 2685.

R. C. T. High School, சிதம்பரம்:—2691, 2693, 2698, 2703, 2704.

பச்சையப்பா ஹைஸ்கூல், சிதம்பரம்:—2711, 2716, 2717.

S. M. Hindu High School, சீர்காழி:—2725, 2730 to 2733.

L. M. C. High School, சீர்காழி:—2742 to 2747, 2750, 2751.

Concordia High School, ஆம்பூர்:—2791.

இஸ்லாமியா ஹைஸ்கூல், வாணியம்பாடி:—2801, 2802.

St. Ignatius Convent High School, பாளையங்கோட்டை:–2806 to 2809.

A. V. Joseph's High School, இட்டமொழி:—2812, 2813, 2816, 2817, 2820, 2826, 2828, 2832, 2833, 2834, 2837, 2838, 2840.

முனிஸிபல் ஹைஸ்கூல், திருப்பத்தூர் N. A. Dt.—2848, 2857.

A. A. M. High School, திண்டிவனம்:–2879, 2881, 2884, 2886, 2888, 2893, 2894.

போர்டு ஹைஸ்கூல், பட்டுக்கோட்டை, Tanjore Dt:–2895, 2906, 2926, 2930, 2931, 2932, 2940, 2942.

போர்டு ஹைஸ்கூல், கோவில்பட்டி:—2945, 2947, 2948, 2963.

T. A. High School, திருவிடைமருதூர்:—2991.

நாஷனல் ஹைஸ்கூல், நாகபட்டினம்:—3005, 3021, 3059, 3075.

மெதோடிஸ்டு மிஷன் ஹைஸ்கூல், நாகபட்டினம்:— 3085, 3087, 3093, 3100, 3104, 3111, 3113, 3115, 3116.

போர்டு ஹைஸ்கூல், கமுதி:—3119, 3124, 3125, 3126, 3128, 3129.

போர்டு ஹைஸ்கூல், சோழவந்தான்:—3146, 3149, 3154, 3157.

மதுரைத்தமிழ்ச்சங்கம்,
21—10—'46.

R. Shanmuga Rajeswaran,
அக்கிராசனாதிபதி.